பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 02 வியாழக்கிழமை 18.11.2021 கதிர் 13

**இது ரகசியம் அல்ல!**

தமிழர் பகுதிகளில் உள்ள பிரதேச சபைகள் தொடர்பில் நான் கோடி காட்டும் விடயங்கள் அப்படியே நடந்தேறி வருகின்றன. யாழ் மேயராக மணிவண்ணன் தெரிவாவார் என்பதில் இருந்து நேற்று வல்வெட்டித்துறை நகர சபையின்

பக்கம்02

# தமிழ்த் தரப்புடன் பேச்சு அமெரிக்கா அறிவிப்பு!

## நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டது

வொஷிங்டன், நவம்பர் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர்கள், மற்றும் உலகத் தமிழர் பேரவையின் (Global Tamil Forum) பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் தாம் வொஷிங்டனில் தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றமையை நேற்று நள்ளிரவு அமெரிக்கத் தரப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

2



State Department GCJ
@StateDept_GCJ

@StateGCJ thanks @TNAmediaoffice & @GTFonline for productive discussion on political representation & reconciliation as part of a wholistic transitional justice agenda. Listening to perspectives & concerns of minority groups in Sri Lanka is essential to promoting reconciliation.




Bureau of Democracy, Human Rights, and Labor
@StateDRL

Advancing the protection and political representation of minority groups in Sri Lanka is a priority for the United States.

We met with @TNAmediaoffice & @GTFonline to discuss ongoing human rights issues in Sri Lanka and ways to strengthen engagement with diaspora communities.

## வொஷிங்டனில் தமிழர் தரப்பு 3 நாள்கள் பல சுற்றுப் பேச்சு

### இன்றும் நாளையும் நியூயோர்க்கில் ஐ.நா. அதிகாரிகளுடன் கலந்தாய்வு

வொஷிங்டன், நவம்பர் 18

அமெரிக்கா சென்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர்கள் குழு மற்றும் உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) பிரதிநிதிகள் குழு ஆகியவை இரண்டும் ஒன்றிணைந்து வொஷிங்டன் டி.ஸியில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த மூன்று நாள்களில் பல தரப்பினருடன் பல சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டன.

சுமந்திரன் தலைமையிலான குழு இன்று நியூயோர்க் பறக்கின்றது. அங்கு ஐ.நா. அதிகாரிகளுடன் இன்றும் நாளையும் பல மட்ட கலந்தாய்வுகளில் அக்குழு ஈடுபடும் எனத் தெரிகின்றது.

2

## காசல்ரீ நீர்த்தேக்கத்தில் 20 வயது ஆணின் சடலம்

நோர்வூட் – நிவ்வெளிகம காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இருந்து இளைஞரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை

12

## மனோவுக்கு கொரோனா

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்குக் கொரோனா

12

## மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு முல்லைத்தீவில் தடையுத்தரவு

முல்லைத்தீவில் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்த 12 பேருக்கு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாவீரர் வாரத்தை முன்னெடுப்பதற்குத் தடை

12

## மீண்டுமொரு கொரோனா அலை ஏற்பட்டால் எதிரணியே பொறுப்பு

### அமைச்சர் வீரசேகர சுட்டிக்காட்டு

நாட்டில் மீண்டுமொரு கொரோனா அலை ஏற்பட்டு, நாட்டை முடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை எதிரணி ஏற்க வேண்டும்.

– இவ்வாறு

12

## தொற்று அதிகரித்தால் மீள பயணக்கட்டுப்பாடு!

### எச்சரிக்கின்றார் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்



கொழும்பு,நவ 18

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், எதிர்காலத்தில் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடர்ந்தால் மீண்டும் போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்படும் என

12

## நேற்று 728 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 728 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த

12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவு – செலவுத் திட்டம் வரை நான் ஆரூடம் காட்டிய விடயங்கள் நடந்திருக்கின்றன. எனக்கு நல்ல ஜோதிடர் என்று பட்டம் தரலாம் என்கின்றார் என் ஆசிரிய பீட நண்பர் ஒருவர்.

மேயர் மணிவண்ணன், தற்சமயம் கஜேந்திரகுமார் – கஜேந்திரன் கைகளில் இருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தன்னுடையதாக்கக் காய் நகர்த்துகின்றார் என்ற ஒரு தகவலை இணையத்தளம் ஒன்றில் இருந்து 'சுட்டு', நான் கோடி காட்டியிருந்தேன்.

அது தொடர்பாகத் தாம் வவுனியாவில் நடத்திய மந்திராலோசனைக் கூட்டம் முடிந்து இரண்டு, மூன்று நாள் கழித்து, நித்திரை கொண்டு எழும்பி, இப்போது அறிக்கை விட்டிருக்கின்றது மணி தரப்பு – அந்தத் தகவல் உண்மைதான் என்பது போல.

கடந்த 2018 உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்பாராத ஆதரவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு தமிழர் பிரதேச மக்கள் அளித்தனர். அந்தப் பிரதிநிதித்துவத்தை என்ன செய்தார்கள் கஜேந்திரர்கள்...? தங்களின் வழமையான Negative Politics (எதிர்மறை அரசியல்) மூலம் அவ்வளவு பிரதிநிதித்துவத்தையும் மண்ணாக்கினர். எந்தப் பிரதேச சபையிலும் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கும் தந்திரோபாயத்தில் அவர்கள் முழு முனைப்புடன் ஈடுபடவில்லை – எல்லா இடங்களிலும் மற்றவர்களைக் குறை சொல்லியமையைத் தவிர.

அவருடன் தொடர்பு வைத்தால் தீட்டு, இவருடன் பேசினால் மகா பாவம், இன்னாருடன் சேர்ந்து இயங்கினால் பெரும்குற்றம் என்று கஜேந்திரர்கள் மாறி, மாறி மற்றவர்களைக் குற்றம் சுமத்தி தத்துவம் பிளந்தனரே தவிர, உள்ளூராட்சி சபைகளுக்குத் தமது தரப்பிலிருந்து தெரிவான 90க்கும் அதிகமான பிரதிநிதிகளை உள்ளூராட்சி அபிவிருத்திக்கான அரசியலே செய்யவே விடவில்லை. அந்த கஜேந்திரர்கள் என்ற இரண்டு பிரகிருதிகளும் அது நெட்டை, இது சொட்டை, நாங்கள் மட்டும் தான் 24 கரட் சொக்கத் தங்கம் என்று கதை பேசினார்களே தவிர, உள்ளூராட்சிக் கான அரசியலை அவர்கள் செய்யவேயில்லை. இவர்களின் கட்சியின் ஆள்களை ஏன் உள்ளூராட்சி சபைப் பிரதிநிதிகளாக்கினோம் என்று அவர்களுக்கு வாக்களித்தோர் நொந்து கொள்ளும் நிலைமை. அதை உணர்ந்து கொண்டு வசமாகப் பயன்படுத்த முயல்கிறார் மணிவண்ணன். நல்ல அரசியல் விவேகிதான்.

யாழ்.மாநகர சபையில் 45 உறுப்பினர்கள். அதில் 13 இடங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குக் கிடைத்தன. அந்த 13 பேரில் பத்துப் பேரை மட்டுமே தன் பக்கம் வளைத்து, அதனை வைத்துக் கொண்டு மேயராகி விட்டார் மணி வண்ணன். கஜேந்திரர்கள் 13 உறுப்பினர்களுடன் செய்ய அனுமதிக்காததை – அதில் 10 பேரை மட்டும் வைத்துக் கொண்டு சாதித் துக் காட்டியிருக்கின்றார் மணி.

இது ஒன்றே கஜேந்திரர்களின் அர்த்த மற்ற – பயனற்ற – சித்தாந்தப் பிடிவாதத்தின் சீத்துவத்தை விளக்கப் போதுமானது.

சரியாக அரசியல் செய்திருந்தால் – காய் நகர்த்திருந்தால் – எப்போதும் Negative Politics செய்யாமல், வெளியே வந்து, தந்திரோபாய நகர்வுகளை முன்னெடுத்திருந்தால், குறைந்த பட்சம் இரண்டு, மூன்று சபைகளையாவது நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கலாம். எதற்குமே கஜேந்திரர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் கட்சியின் அடிமட்டத்தில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியைத் தமக்குச் சாதகமாக்க முயலுகின்றார் காரியத்தில் கண்ணான மணி.

சரி, கொள்கை, சித்தாந்தம், இலட்சியம், தேசியம் என்று பிடிவாதம் பிடித்து, கஜேந்திரர்களின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் அவற்றில் உறுதியாக நின்றார்களா என்றால் அதுவும் இல்லை.

பிரதேச சபைகளின் தலைவர்கள் தெரிவு, பிரதேச சபைகளின் வரவு – செலவுத் திட்டம் போன்றவற்றின் வாக்களிப்புகளில் சில சமயங்களில் கலந்து கொள்ள மாட்டார்கள். சிலவற்றில் கலந்து கொண்டு சில தரப்புகளை ஆதரிப்பார்கள். கடைசியில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவர்களின் பிரதிநிதிகளின் நடவடிக்கையால் தமிழ்த் தேச விரோத சக்திகளின் கைகளில் அதிகாரம் போயிருக்கும். அல்லது தமிழ்த் தேச விரோத சக்திகளின் சார்பாக வரவு – செலவுத் திட்டம் நிறைவேறியிருக்கும். அல்லது அவர்களுக்கு சார்பாக தோற்கடிக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு சபையாக எடுத்து ஆராய்ந்து – விவரித்தால் – கஜேந்திரர்கள், சித்தாந்தம், இலட்சியம், இலக்கு என்ற விதண்டா வாதம் பண்ணி, உள்ளூராட்சித் தேர்தலில் தமக்கு வாக்களித்த மக்களை எப்படி நட்டாற்றில் விட்டனர் என்பதையும், யதார்த்தமற்ற அவர்களது உள்ளூராட்சி அரசியலின் நிராற்றத்தையும் அறியலாம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் மக்களின் வாக்குகள் அணிகளாகப் பிரியும் போது, பல சமயங்களில், எந்தத் தரப்புக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காமல் போகும். அப்போது இரண்டொரு உறுப்பினர்களை வைத்திருக்கும் கட்சியோ, அணியோ மீளப் பெரும் வலிமையுள்ள சக்தியாக மாறிவிடும். அதை வைத்து அரசியல் செய்வது, தந்திரோபாயமாக காய் நகர்த்துவதுதான் உள்ளூராட்சி அரசியல். அது தெரியாமல் – புரியாமல் – கிடைத்த வாக்குகளையும், அதன் மூலம் கிடைத்த பிரதிநிதிகளையும் சபைகள் தோறும் மண்ணாக்கி, தம் தலையில் மண் அள்ளிப் போடும் வேலையையே கஜேந்திரர்கள் தரப்பு செய்தது.

உள்ளதில் வள்ளிசை அதிகாரத்துக்குக் கொண்டு வரும் வாய்ப்பை, வேண்டுமென்றே உதாசீனப்படுத்தி, கோட்டை விட்ட குற்றம் மாத்திரமல்ல, அதன் மூலம் பிழையான தரப்புகள் அதிகாரத்துக்கு வருவதற்கும் கஜேந்திரர்களின் புத்திசாதுரியமற்ற – சித்தாந்தத்தின் பேரிலான முட்டாள்தன – அரசியல் காரணமாயிற்று.

அதை இன்னும் புரிந்து கொள்ளாமல் கஜேந்திரர்கள் வேறு ஏதோ ஓர் அரசியல் உலகில் வாழ்கின்றார்கள்.

வரக் கூடிய மாகாண சபைத் தேர்தலின் முடிவிலும் இதைத்தான் அவர்கள் செய்வார்கள். 'அரசியல் தீட்டு', பற்றிய அவர்களின் மழுங்கடிக்கப்பட்ட சிந்தனை அத்தகையதுதான்.

தேறாத அவர்களுக்குப் பாடம் புகட்ட மணி தரப்புப் போன்றவை உருவாகுவது வரலாற்றுக் கட்டாயம்.

* * *

வடக்கில் மூத்த அரச அதிகாரிகள் பலருக்கு திள் நெருக்கடி. ஓய்வுபெறும் காலம் வரை சிக்கல்களில் மாட்டாமல் தப்பிப் பிழைப்பது எப்படி என்று ஒவ்வொரு மூத்த அரச அதிகாரியும் தத்தமது தலையை உருட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

அரச சட்ட விதிமுறைகள், சுற்று நிருபங்கள், 'ஏ.ஆர். அண்ட் எவ்.ஆர்' (ஸ்தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்கள்) தெரியாதவர், அரச அதிகாரிகளை நிர்வகிக்க வந்தமையால் வந்த சிக்கல் என்கின்றார் ஓர் அரச அதிகாரி.

சரியோ, பிழையோ இந்த விடயத்தை அனைத்து அரச அதிகாரிகளும் பொதுப் பிரச்சினையாகக் கருதி, தமக்குள் ஒன்று திரளுகின்றார்கள். விடயம் ஜனாதிபதி வரை கூட்டாக, கட்டாகக் போகப் போகின்றது என்பது திண்ணம்.

அது குறித்து விலாவாரியாகப் பின்னர் எழுதுவேன்.

* * *

மருத்துவ, சட்ட, ஊடக வட்டாரங்களில் ஒரு விடயம் நேற்று குசுகுசு எனப் பேசப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு வரை விடயம் சென்றுள்ளது.

கிளிநொச்சியில் பாதசாரிக் கடவையில் மோதுண்டு ஒரு பாடசாலை மாணவி இறக்க, இன்னொருவர் படுகாயமடைந்தார் என்பது பலரினதும் மனதை நெருடிய சம்பவம். இந்தக் கோர நிகழ்வின் சி.சி.ரி.வி. பதிவு சமூக ஊடகங்களில் வெளியாகி, மேலும் மக்கள் மனதை அரித்து வருகின்றது.

படுகாயமுற்ற மாணவி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவர் மேஜர் அல்லர். பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்.

'வீதி விபத்துக்களைத் தடுப்போம் – அவரச கலந்துரையாடல்' – என்ற பெயரில் என்.ஜி.ஓ. ஒன்றின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் 'சூம்' முறையில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. யாழ்.ஆஸ்பத்திரியின் நிர்வாகி ஒருவரும் அந்த ஏற்பாட்டில் சம்பந்தப்பட்டிருக்கின்றார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மாணவியையும் 'சூம்' உரையாடலில் இணைத்து, நடந்தவை பற்றி அவரின் கருத்துகளும் அப்படியே பகிரங்கப்படுத்தப்பட்டன.

உயிரிழப்புடன் தொடர்புடைய விபத்து வழக்கு விடயம் நிலுவையில் உள்ளது. மேஜர் ஆகாத அந்த மாணவியின் சட்ட வாக்கு மூலங்கள், சாட்சியங்கள், பொலிஸ் விசாரணைப் பதிவுகள் முழுமையாகப் பதியப்பட்டு விட்டனவா என்பது தெரியாது. விபத்தில் சிக்கி சிகிச்சை பெறுபவரை ஆஸ்பத்திரி நிர்வாகமே இப்படி விபத்துப் பற்றிய பகிரங்கக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தலாமா என்ற கேள்வி எழுகின்றது. பெற்றோர் அனுமதி பெறப்பட்டதா என்ற கேள்வியும் உள்ளது.

எனக்கு என்னவோ ஆஸ்பத்திரி நிர்வாகம், சமூக நலனுக்கான அதீத ஈடுபாட்டில் அவசரப்பட்டு தவறு இழைத்து விட்டதோ என்றுதான் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## வொஷிங்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திங்களன்று பத்துத் தரப்புகளுடனும், செவ்வாயன்று பத்து தரப்புகளுடனும், நேற்று ஐந்து தரப்புகளுடனும் இக்குழு சந்திப்புக்களை நடத்தி கலந்தாய்வுகளை மேற்கொண்டது.

இந்தச் சந்திப்புகள், கலந்தாய்வுகள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உத்தியோகபூர்வ அறிவிப்புகளை வெளியிடும் எனத் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது. அதனால் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் இச்சந்திப்புகள் தொடர்பில் தங்கள் பக்கத்தில் இருந்து அறிவிப்புகள் மற்றும் தகவல் வெளியீடுகளைத் தவிர்த்து வருகின்றனர் எனவும் கூறப்பட்டது.

கடந்த மூன்று நாள்களாக நடந்த சந்திப்புகளில் தமிழர் தரப்பில் மொத்தம் ஒன்பது பிரதிநிதிகள் ஒன்றாகக் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, கனகேஸ்வரன் மற்றும் திருமதி நிர்மலா சந்திரஹாசன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் என்பது தெரிந்ததே.

உலகத் தமிழர் பேரவையின் சார்பில் கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒவ்வொரு பிரதிநிதியும், அமெரிக்காவில் இருந்து மூவருமாக மொத்தம் ஆறு பேர் பங்கு பற்றுகின்றனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பல்வேறு திணைக்களங்களின் இரண்டாம் நிலை அதிகாரிகள், தமது அரசின் இலங்கை தொடர்பான கொள்கை வகுப்பு நிலைப்பாடுகள் சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதற்காக தமிழர் தரப்புடன் தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்து நேற்று முன்தினம் இரவு, கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனை அழைத்து இரவு விருந்துடன் சந்திப்பு நடத்தினார்.

அமெரிக்கத் தரப்புடன் தமிழ்ப் பிரதிநிதிகள் தற்போது நடத்தும் கலந்தாய்வுகள் குறித்து சுமந்திரனிடம் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் விவரமாகக் கேட்டறிந்திருப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இச்சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் அமெரிக்க நேரப்படி நேற்றுப் புதன்கிழமை பகல் (இலங்கை நேரப்படி நேற்றிரவு) பல்வேறு பேச்சுக்களை முடித்துக் கொண்டு சுமந்திரன் நியூயோர்க் புறப்பட்டார்.

அவருடன் வொஷிங்டன் சென்ற ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரனும், திருமதி நிர்மலா சந்திரஹாசனும் வொஷிங்டனிலேயே தங்கியுள்ளனர்.

நியூயோர்க்கிற்கு சுமந்திரனுடன் உலகத் தமிழர் பேரவையின் ஓரிரு பிரதிநிதிகளும் சேர்ந்து செல்லக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி, இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி மற்றும் ஐ.நாவின் உயர்மட்ட அலுவலர்களோடு சுமந்திரன் குழுவினர் சந்திப்பில் ஈடுபடுவர் எனத் தெரிகின்றது.

நியூயோர்க் பேச்சுக்களை முடித்துக் கொண்டு சுமந்திரன் குழு ஞாயிறன்று மீண்டும் வொஷிங்டன் திரும்பும்.

அடுத்த நாள் 22ஆம் திகதி திங்கட்கிழமை தமிழர் தரப்பின் ஒன்பது பிரதிநிதிகளும் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உயர்மட்ட அதிகாரியுடன் பேச்சுக்களை நடத்துவர். அத்தோடு தமிழர் தரப்பின் இந்த அமெரிக்க விஜயம் முடிவுக்கு வரும் எனத் தெரிகின்றது.

அடுத்த நாள் 23ஆம் திகதி கனடாவின் ஒட்டாவா நகரில் கனேடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் –

அதன் பின் இரண்டு நாள்கள் கழித்து 25ஆம் திகதி லண்டனில் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் –

சுமந்திரன் எம்.பி. – சாணக்கியன் எம்.பி. ஆகியோரைக் கொண்ட இரு பிரதிநிதிகள் குழு பேச்சு நடத்தவிருப்பது தெரிந்ததே. (உ)

## தமிழ்த் தரப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுமந்திரன் தலைமையிலான குழுவுடன் பேச்சுகள், கலந்தாய்வுகள் நடைபெறுகின்றமையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இரண்டு பிரிவுகள் டுவிட் செய்திகள் மூலம் படங்களுடன் வெளியிட்டு உறுதிப்படுத்தியது.

அவற்றில் ஒன்று State Department GCJ. இது கொடுமைகளுக்கு எதிரான பொறுப்புக் கூறலை மேம்படுத்துவது, பூகோளக் குற்றங்களில் இருந்து பாதிக்கப்படுவோரைப் பாதுகாப்பது, நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை மேம்படுத்துவது ஆகியவை தொடர்பான இராஜாங்க அமைச்சின் பிரிவாகும்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான பிரிவு என்றும் அதனை அழைப்பர்.

அது, "நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இலங்கையின் சிறுபான்மை இனக் குழுக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் கவலைகளைச் செவிமடுப்பது முக்கியமாகும். அந்த வகையில் பூரணத்துவமான நிலைமாறு கால நீதிக்குரிய நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் நல்லிணக்கம் குறித்து இலங்கையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய தரப்புகளுடன் ஆக்க பூர்வமான பேச்சுக்களில் ஈடுபட்டோம்." – என்று தெரிவித்துள்ளது.

இதேசமயம் –

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் பணியகம் (Bureau of Democracy, Human Rights,Labor) மேற்படி தமிழ்க் குழுவினருடனான பேச்சுகள் குறித்து பிறிதொரு டுவீட் செய்தியை வெளியிட்டது.

"இலங்கையில் சிறுபான்மைக் குழுவினரின் பாதுகாப்பு மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவது அமெரிக்காவின் முன்னுரிமை விடயமாகும்.

இலங்கையில் தற்போது நிலவும் மனித உரிமைகள் பிரச்சினைகள் மற்றும் புலம்பெயர் சமூகங்களுடனான ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து விவாதிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளை சந்தித்தோம்." – என்று அந்த அமைப்பு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

இதேபோன்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சுமார் இருபதுக்கு மேற்பட்ட பணியகங்கள், பிரிவுகள், தரப்புகளுடன் மேற்படி ஒன்பது பேர் கொண்ட தமிழர் தரப்பு பிரதிநிதிகள் குழு நேற்றுவரை பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தது. (உ)

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

# நாம் நாசமாகிப் போனாலும் கூட நாணய நிதியத்திடம் போகோம்!

## அமைச்சர் வாசு திட்டவட்ட அறிவிப்பு

அரசாங்கம் நாசமாகிப் போனாலும் கூட ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று மக்களை நாசமாக்க இடமளிக்கமாட்டோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க புதிய முறையில் சிந்திப்பது என்பது சர்வதேச நாணய நிதியத்திடன் செல்வதல்ல. எதிர்க்கட்சியினர் ஆட்சியில் இருந்த காலத்தில் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றனர். என்.எம். பெரேரா முதலில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றார் எனவும் கூறினர். இது முழுப்பொய் யாகும். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டாம் என்பதையே அவர் கூறினார்.



அவர்களின்முதல்கோரிக்கையே ரூபாவின் பெறுமதியை குறைப்பதாகும், ஆகவே சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது என்பது சிறைக்கு செல்வதற்கு சமமானது. சிறையில் குறைந்த பட்சம் உணவாவது கிடைக்கும், சர்வதேச நாணய நிதியத் திற்கு சென்றால் எம்மையே உணவாக் குவார்கள். எனவே இது மிக மோசமான காரணியாகும். மிகவும் நெருக்கடியான நிலையிலேயே இந்த வரவு–செலவுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அரச நிதி நெருக்கடி உள்ள நிலையிலும், டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலை யிலும், சர்வதேச சந்தையில் விலை உயர்வு காணப்படுகின்ற நிலையிலும், ஏனைய பல சிக்கல்கள் உள்ள நிலை யிலும் நாட்டில் விலைவாசி அதிக ரிக்கும்.

இதற்கு எதிர்க்கட்சியிடம் தீர்வு உள்ளதா? எனவே இதனை சிந்தித்து பார்க்க வேண்டும். கஷ்டப்படும் மக்களின் நலன்கள் குறித்தும் இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது, அதேபோல் சில மோசமான முன்மொழிவுகள் உள்ளன. கொவிட் வைரஸ் தொற்றுகள் இல்லாதிருந்திருந்தால் வேறு விதமாக இந்த வரவு–செலவுத் திட்டம் உருவாகியிருக்கும். இன்று வறுமை, வேலையின்மை அதிகரித்துள்ளது.

அவற்றை கருத்தில் கொண்டே இறுக்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் வர்க்க வாதத்திற்கு அமையவே இது பாதிப்பை செலுத்தும் என்பதை எம்மால் மட்டுமே உணர முடியும். கஷ்டப்படும் அப்பாவி மக்கள் தொடர்ந்தும் கஷ்டப்பட வேண்டி வரும், பணம் படைத்த மேல் வர்க்கத்தினருக்கு இது பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆகவே அரசாங்கம் நாசமாகிப் போனாலும் கூட ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று மக்களை நாசமாக்க இடமளிக்க மாட்டோம். அதுவே எமது உறுதியான நிலைப்பாடு என்றார்.

## சுகாதார அமைச்சுக்கு எதிரில் போராட்டம் முன்னெடுத்தனர் சுகாதாரப் பணியாளர்கள்

சுகாதாரப் பணியாளர்கள் நேற்று தொழிற்சங்க போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

தாதியர்கள் உள்ளிட்ட 16 சுகாதார சேவையைச் சேர்ந்த தொழிற் சங்கங் கள் இவ்வாறு போராட்டத்தை முன்னெ டுத்தன.

சுகாதார அமைச்சுக்கு எதிரில் நேற்று நண்பகல் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக சுகாதார சேவை தொழிற்சங்க ஒன்றியத்தின் இணை அமைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுகாதாரப் பணியாளர்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சம்பள முரண்பாடுகள் தொடர்பில் உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 24 ஆம் திகதி இரண்டு நாள் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை நடத்த நேரிடும் என ஒன்றியத்தின் மற்றுமொரு இணை அமைப்பாளரான சமன் ரத்னப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## கொழும்பில் இடம்பெற்ற எதிரணியினரின் ஆர்ப்பாட்டத்தில் குண்டுத்தாக்குதல் நடக்குமென அச்சுறுத்தியவர் கைது



ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்ட பேரணியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்படக்கூடும் என அச்சுறுத்தல் விடுத்த சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் மனநலம் குன்றியவர் எனத் தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்ட பேரணியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்படக்கூடும் என அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் குறிப்பு ஒன்றை வழங்கிச் சென்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**University of Jaffna**
**Vacancy - Post of Temporary Demonstrator - Faculty of Medicine**

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences from the State Universities or UGC recognized foreign Universities. *(Priority will be given to the MBBS graduates. Research experience in the relevant field is preferable)*

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website: **http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**
Applications with scanned copies of candidates should be sent **on or before Monday, 22.11.2021** to the following email address: **fomvacancy@univ.jfn.ac.lk**

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favour of Bursar, University of Jaffna.

Selection interview for the above post will be held via online on **Thursday, 25th of November 2021 at 2.00pm** for eligible candidates with notice by email.

Registrar
University of Jaffna
17.11.2021

## கஞ்சா செய்கையின் ஊடாகவே நாட்டின் கடனை அடைக்கலாம்!

### டயனா கமகே இப்படி ஆலோசனை

கஞ்சாசெய்கையின்ஊடாகநாட்டின் கடன் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே ஆலோசனை வழங்கியுள்ளார். அரசாங்க அனுமதியுடன் கஞ்சா செய்கையில் ஈடுபட்டு அவற்றை ஏற் றுமதி செய்வதன் மூலம் நாட்டை கடன் சுமையிலிருந்து மீட்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

கஞ்சா செய்கையின் ஊடாக நாட்டுக்கு பாரியளவில் அந்நிய செலாவணியை ஈட்ட முடியும்.

தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவற்றுக்குக் கடந்த காலங்களில் சர்வதேச அரங்கில் காணப்பட்ட கேள்வி தற்பொழுது கிடையாது.

கஞ்சா செய்கையில் ஈடுபட்டு அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

இயற்கை வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் நாட்டுக்குப் பாரிய பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யார் பயங்கரவாதிகள்?

யார் பயங்கரவாதிகள்? எது பயங்கரவாதம்?

நீண்டு செல்லும் – அதிக வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தும் – கேள்விகள் இவை. அந்த விடயத்தை ஒட்டிய விளக்கங்களையோ, வியாக்கியானங்களையோ இங்கு நாம் தர முற்படப் போவதில்லை.

ஆனால் 'பயங்கரவாதம்' என்றும், 'பயங்கரவாதிகள்' என்றும் குற்றம் சுமத்துபவர்கள்தான் உண்மையில் பயங்கரவாதிகள் என்பதைச் சுட்டுவதுதான் நமது கருத்து.

இலங்கையைப் பொறுத்தவரை இலங்கை நாட்டின் மீயுயர் சட்டம் அரசமைப்பு. அந்த அரசமைப்புக்கும், அதன் கீழான சட்டத்துக்கும் மாறாக ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை இலங்கை அரசும், ஆட்சிப்பீடமும், சட்டத்துறையும், நீதிமன்றங்களும் 'பயங்கரவாதிகள்' என்றும், அவர்கள் ஆற்றும் செயல்களைப் 'பயங்கரவாதம்' என்றும் நாமம் சூட்டுகின்றன.

இந்த வகையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் 'பயங்கரவாதிகள்' பட்டம் சூட்டப்பட்டது.

புலிகளுக்குப் பயங்கரவாதப் பட்டம் சூட்ட முன்னர் புலிகள் யார் என்பதை நாம் நோக்க வேண்டும்.

அவர்கள் வடக்கையும், கிழக்கையும் தமது வரலாற்றுத் தாயகமாகக் கொண்ட தமிழர் தேசத்தின் பூர்வீகக் குடிகளின் வழித் தோன்றல்கள். தமிழர் தேசத்தின் பிரஜைகள்.

சரியோ, பிழையோ 1972 இலும், பின்னர் 1978 இலும் இலங்கைத் தீவில் பௌத்த, சிங்கள ஆட்சியாளர்களினால் எதேச்சாதிகாரமாக கொண்டுவரப்பட்ட அரசமைப்புகள் தமிழர்கள் தலை மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டவை. அந்த இரண்டு அரசமைப்புக்களின் உருவாக்கத்திலும் நிறைவேற்றலிலும் தமிழர்கள் பங்குபற்றவில்லை. மாறாக, அவற்றுக்குத் தமிழர் தரப்புகள் சமர்ப்பித்த யோசனைத் திட்டங்கள் கருத்தில் கூட எடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டன. அந்த அரசமைப்புக்களை தமிழர்களின் பிரதிநிதிகள் ஆதரிக்கவோ வரவேற்கவோ கூட இல்லை. அந்த இரண்டையுமே அவை நிறைவேற்றப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட காலத்திலேயே தமிழர்கள் அடியோடு – முழுமையாக – எதிர்த்தனர்.

1972 இல் அப்போதைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த குடியரசுத் தினத்தைத் தமிழர்கள் கறுப்பு நாளாகவே அனுஷ்டித்தனர். அதே நிலைமைதான் 1978 அரசமைப்புக்கும்.

ஆக, தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாத அரசமைப்பையும், அந்த அரசமைப்பின் கீழான சட்டங்களையும் வைத்துக் கொண்டுதான் தமிழ் மக்களின் பிள்ளைகளை – புலிகளை – தென்னிலங்கை பௌத்த, சிங்களம் தனது சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளாகப் பட்டம் சூட்டியது.

அதாவது, இலங்கை அரசமைப்பையும், அதன் கீழான சட்டங்களையும் ஏற்றுக் கொள்ளாத தரப்பான விடுதலைப் புலிகளைத்தான் அந்தச் சட்டங்களுக்கு அடங்கி நடக்காமைக்காக – மீறியமைக்காக – 'பயங்கரவாதி' என்று பட்டம் சூட்டியது – சூட்டுகின்றது – சிங்களம்.

நல்லது. இலங்கையின் அரசமைப்பில் 13ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட ஷரத்துக்களை – அவை அரசமைப்பில் உள்ள சட்ட விதிகள் என்று தெரிந்தும் – கடந்த 33 வருடங்களாக நடைமுறைப்படுத்த மறுத்து – பலவந்தமாக மறுத்து – அரசமைப்பையே மீறும் அரசுகளாக கடந்த 33 வருட கால கொழும்பு ஆட்சிப்பீடம் தொடருகின்றது.

தான் ஏற்ற, நிறைவேற்றிய, அங்கீகரித்த, சட்டமாக்கிய அரசமைப்பு ஏற்பாடுகளையே நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று அடம் பிடித்து குற்றமிழைக்கும் – அதுவும் அரசமைப்பையே மீறும் குற்றத்தை வேண்டும் என்றே இழைக்கும் – கொழும்பு ஆட்சிப்பீடத்தினர் அச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளா? அல்லது தாங்கள் ஏற்காத சட்டத்தின்படி ஒழுக்க் தவறிய புலிகள் பயங்கரவாதிகளா? நியாயமுள்ள நெஞ்சினர் தீர்மானிக்க வேண்டிய – தீர்ப்பளிக்க வேண்டிய – விவகாரம் இது.

# அபாயகர பகுதிகளிலுள்ள குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தவும்

## பிரதமர் மஹிந்த உத்தரவு



அபாயகரமான பகுதிகளில் வசிக்கும் 12 ஆயிரம் குடும்பங்களை விரைவில் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் நாடாளுமன்ற குழு அறை 02 இல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்குவது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகப் பிரதமர் இதன் போது கேட்டறிந்தார்.

தற்போதைய தொற்று நோய் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை முகாம் களில் தடுத்து வைக்காது பாதிக்கப்பட்ட 31 ஆயிரத்து 475 பேர் இதுவரை அவர்களது சொந்த உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரிய வந்தது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் ஏற்கனவே 21 மாவட்டங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. முதற்கட்ட இழப்பீடு வழங்கும் நடவடிக்கை தாமதமின்றி நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் அதிக அபாயம் மிகுந்த பிரதேசங்களில் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனஎனவும், ஆனால் இதுவரை 3 ஆயிரம் குடும்பங்கள் மாத்திரமே வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளன எனவும் தெரிய வந்துள்ளது. இதன்படி, தற்போது அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வாழும் 12 ஆயிரம் குடும்பங்களை விரைவில் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துமாறு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆபத்தான சூழ்நிலையைக் கண்டறிந்து, அதற்கேற்பமுன்னுரிமை அளித்து, இந்த மக்களை ஆபத்தில் இருந்து மீட்கத் திட்டமிடவும் பிரதமர் அறிவு றுத்தினார். மீள்குடியேற்றத் துக்காக காணிகளை சுவீகரிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ கவனத்துக்கு கொண்டு வந்தார். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் ஒன்றிணைந்து தீர்வு காண்பது என இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப் பட்டது.

கனமழை காரணமாக மண்சரிவு, பலத்த காற்று, வெள்ளம், திடீர் வெள்ளம் மற்றும் மின்னல் தாக்கம் காரணமாக இதுவரை 21 மாவட்டங்களில் 26 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 2 லட்சத்து 62 ஆயிரத்து 831 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, அநுராதபுரம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு அடிக்கடி இடம்பெற்று வருவதால், அதன் மூலம் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அனர்த்தங்கள் நீண்டகாலமாக இனங்காணப்பட்டு வருகின்றமையால் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஏற்றவாறு குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானது என அமைச் சர் பஸில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கொழும்பு–கண்டிபிரதான வீதி கடுகன்னாவையுடன் மூடுவது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப் பட்டது. தற்போதைய நிலைமைக்குத் தீர்வாகத் தற்போதுள்ள பாதையை ஒருவழிப் பாதையாகப் போக்குவரத்துக்காகத் திறப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறும், அவ்வாறு இன்றேல் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மாற்று வழிபாதையை விரைவில் அபிவிருத்தி செய்யுமாறும் பிரதமர் இதன் போது நெடுஞ்சாலை கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு பணிப்புரை விடுத்தார்.

# கசிப்புடன் பெண்ணொருவர் பொன்னாலையில் கைது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை பகுதியில் கசிப்பு விற்பனை செய்து வந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (புதன்கிழமை) ஆயிரத்து ஐந்நூறு மில்லிலீற்றர் கசிப்புடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்"

- நி.தி.மிரோவ்
(அமெரிக்க எழுத்தாளர்)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உண்மை மீறல் தொடர்பில் அவதானமில்லை

## றொகான் ராஜ்குமார் குற்றச்சாட்டு




**சண்முகம் தவசீலன்**

இலங்கை மனித உரிமை ஆணைக் குழு அதன் ஊழியர்களையும் நிர்வாகி களையும் பாதுகாப்பதற்கும் அரசாங் கத்தைப் பாதுகாப்பதற்கும் மட்டுமே செயற்படுகின்றதே தவிர உண்மையான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இதுவரை அவதானம் செலுத்தவில்லை என்றும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள் ளார் வடக்கு கிழக்கு ரயில் கடவை காப் பாளர் சங்கத் தலைவர் றொகான் ராஜ் குமார். வடக்கு கிழக்கு ரயில் கடவை காப்பாளர் சங்கத் தலைவர் றொகான் ராஜ்குமார் முல்லைத்தீவு ஊடக அமை யத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார். அங்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில் –

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்த அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமை என்ற கருத்தை வன்மையாகக் கண்டித்து நிற்கின்றோம்.

அமைச்சருக்கு ஒரு விடயத்தை நினைவு கூருகின்றோம். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் ஆட்சி– யாளர்களுமே சுமையாக இருந்துள் ளார்கள் என்பதன் விளைவே இன்று நாடு பின்நோக்கி சென்றுகொண்டிருக் கின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஏழாம் ம ாதம் முதலாம் திகதி தொடக்கம் நாடு தழுவியரீதியில் இருக்கக்கூடிய ரயில் கடவைகளில் பணியாளர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட 2 ஆயிரத்து 64 ஊழியர்களில் பலர் இலங்கை பொலிஸாரால்பலவந்தமாகஇணைத்துக் கொள்ளப்பட்டவர்கள். அவர்கள் இன்று வரை தொழில் உரிமை மறுக்கப்பட்டு இலங்கைத் தொழிலாளர் சட்டத்துக்கு முரணான விதத்தில் பொலிஸாரின் கீழ் அடிமைகளாகவே நடத்தப்படுகின்றோம் என்ற விடயத்தை ஐ.நா. மனித உரிமை கள் ஆணையகத்துக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்ய முழுமையான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட போதும் ஜனாதிபதி பிரதமர் ஆகியோரின் வாக்குறுதிகளை நாங்கள் எதிர் பார்த்து 2022 ஆம் ஆண்டு வரவு–செலவுத்திட்டத்தில் எமக் கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊழியர்களுக்கான நிரந்தர ஊழியம் வழங்கப்பட்டு நீதி நிலை நாட்டப்படும் என எதிர்பார்த்திருந்தோம்.

மீண்டும்நாங்கள்வஞ்சிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது கடந்த 8 ஆண்டுகளாக 250 ரூபாவில் எங்கள் வாழ்க்கைச் செலவை கொண்டு நடத்தி நாட்டு மக்களுக்கு சேவை செய்த எங்களை இந்த அவல நிலைக்கு தள்ளிவிட்டது வேறு யாரும் அல்லர் முன்னாள் ஜனாதிபதியும் இப்போதைய பிரதமருமாகிய மஹிந்த ராஜபக்ஷ தான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி இணைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக நாங்கள் இன்று அரசாங்கத்தால் ஏமாற் றப்பட்டுள்ளோம்.

எங்களுக்கு தீர்வு வழங்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும் நாட்டின் தொழிலாளர்களை இழிவாகக் கதைப்பதற்கு அமைச்சர்களுக்கு அதி காரமில்லை. நாட்டை இந்த நிலை மைக்கு பின்தள்ளி விட்டு தங்கள் அரசி யல் தேவைகளுக்காக மக்களையும், அரசசுகாதாரத்தையும்,அரசஊழியர்களை யும் இழிவாகக் கதைப்பதை நிறுத்தி 2022 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் எமக்கான நிலையான நிதியை ஒதுக்கி ரயில்வேத் திணைக்களத்துக்குள் எங்க ளுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி நிற்கின்றோம்.

இந்த நாட்டில் சுயநலம்மிக்கவர்கள் அதிகமாக வாழ்வதன் காரணமாக இந்த நாடு அதளபாதாளத்துக்குள் சென்று கொண்டிருக்கின்றது. மக்கள் அனை வரும் தங்கள் சுயநலத்தை மறந்து நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்துக்காகக் குரல்கொடுக்க வேண்டும். தொழிலாளர் கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடப் போகிறோம் எனத் தெரிவித்திருந்தீர்கள் இதுதொடர் பில் தற்போதைய நிலைப்பாடு என்ன என இதன்போது ஊடகவியலாளர் ஒரு வரின் கேள்விக்கு பதிலளிக்கையில், நாங்கள் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவில் தொடர்ச்சியாக எங்களுக்கு இடம்பெறுகின்றபழிவாங்கல் கள், அச்சுறுத்தல்கள், மனித உரிமை மீறல்கள் அடிப்படை தொழில் உரிமை மீறல்கள் தொடர்பில் பலதரப்பட்ட முறைப் பாடுகளைப் பதிவு செய்துள்ளோம்.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழு அதன் ஊழியர்களையும் நிர்வாகி களையும் பாதுகாப்பதற்கும் அரசாங்கத் தைப் பாதுகாப்பதற்கும் மட்டுமே செயற்படுகின்றதே தவிர உண்மையான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இதுவரை அவதானம் செலுத்தவில்லை என்றும் பகிரங்கமாக கூறுகிறேன் என குற்றம் சாட்டியுள்ளார்.

# மக்களைக் கடவுள்தான் காப்பாற்றியாக வேண்டும்!

## ஹெக்டர் அப்புகாமி தெரிவிப்பு



ஏழை மக்களின் வயிற்றில் சம்மட் டியால் அடித்துள்ள இந்த அரசிட மிருந்து மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு – செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் ஏழைகளே இலக்கு வைக்கப்பட்டு தாக்கப் பட்டுள்ளார்கள்.

ஒரு விபத்து நடந்தால் அதில் சிக்கியவர்கள் காப்புறுதி நிறு வனத்துடன் தொடர்பு கொண்டு நட்டஈடுகளைப் பெற்று தமது பிரச் சினைகளைத் தீர்த்துக்கொள்வதே வழமை.

ஆனால் ஒரு ஏழை விபத்தை ஏற்படுத்தினால் விபத்தால் நட்டப்பட்டு அரசுக்கும் தண்டம் செலுத்து வதென்றால் அவனின் நிலை என்ன?

மரக்கறிகளின் விலைகள் கூட கிலோகிராம் 700 ரூபாவைத் தாண்டி விட்டன. ஏழை மக்கள் மரக்கறி களைக்கூட வாங்கிச் சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் உரமின்றி விவசா யத்தைக் கைவிடும் நிலைக்குச் சென் றுள்ளனர். மீண்டும் ஓர் உணவுப் பஞ் சத்தை நோக்கிநாடு நகர்ந்து கொண்டி ருக்கின்றது.

அமெரிக்க வரவு – செலவுத்திட் டத்தைச் சமர்ப்பித்து ஏழை மக்களின் வயிற்றில் சம்மட்டியால் அடித்துள்ள இந்த அரசிடமிருந்து மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# தேசியப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களில் மாற்றமா?

## மறுக்கிறார் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா

**(வி.ரி.சகாதேவராஜா)**


இம்முறை தேசியப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களைத் தயாரிக்கும் போது, பாடத்திட்டங்களின் எண்ணிக்கை ஒரு போதும் குறைக்கப்பட மாட்டாது என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு வினாத்தாள் தயாரிப்பில் பாடத்திட்டங்களின் எண்ணிக்கை குறைக் கப்படும் என பரவி வரும் வதந்திகள் தொடர் பாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொற்றுநோய் காரணமாக, இந்த ஆண்டு பாடத்திட்டங்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்று சில அரச பாடசா லைகள் மற்றும் தனியார் வகுப்பு ஆசிரி– யர்கள், மாணவர்களுக்குத் தெரிவித்துள் ளனர். மற்றும் சிக்கலான பாடத்திட்டங்க ளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்று சில ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இன்னும் சில ஆசிரியர்கள், இலகுவான பாடத்திட்டங்கள் நீக்கப்படும் என்றும் கூறியுள்ளனர். இதனால் இம் முறை பரீட்சைக்கு தோற்றவுள்ள மாண வர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர்.

குறித்த பரீட்சைகளை எழுதுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள் ளதால், பாடத்திட்டங்களின் எண்ணிக்கை



யைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நடை பெறவுள்ளதுடன், க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையும் மே மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 327 இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கிய சுவிஸ்

சுவிட்ஸர்லாந்து அரசு, இலங்கைத் தமிழர்கள் 327 பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை பாதுகாப்பு பிரிவு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸாரால் மரண அச்சுறுத்தல் மற்றும் சித்திரவதைகள் மேற் கொள்கின்றன என சுவிஸ் அரசாங்கத்திடம், குறித்த இலங்கையர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் பெற்ற நபர்கள் யார் என சுவிஸ் அரசாங்கம் இதுவரையில் தகவல் வெளியிடவில்லை. எனினும் 17 இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க சுவிஸ் அரசாங்கம் நிராகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த இலங்கையர்கள் முன்வைத்த முறைப்பாடு தொடர்பில் சுவிஸ் குடிவரவு திணைக்களம், இலங்கை அரசாங்கத்திடம் வினவியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சூரிச் நகரத்தில் மொழி மாற்றம் செய்யும் ஒருவரால் இந்த நபர்களுக்கு அரசியல் தஞ்சம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த நபரால் அதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் தகவல் வெளியாகியுள்ளதென அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 195

**495. தமிழ் மக்களின் அரசியல் யாப்பு அனுபவங்கள் என்ன?**

சுதந்திரம் அடைந்தபோது தமிழ் மக்கள் வைத்த கோரிக்கைகள் பிரித்தானியாவால் செவிசாய்க்கப்படவில்லை. அப்பொழுது இன உறவுகள் எவ்வளவோ மேம்பட்ட நிலையில் இருந்தன. தங்களுக்காகப் பிரித்தானியாவுக்கு வாதாடச் சென்ற சேர்.பொன்னம்பலம் இராம



கோடீஸ்வரன்

நாதனை டி.எஸ்.சேனநாயக்காவும் மற்றத் தலைவர்களும் கொழும்பு துறைமுகத்திலிருந்து தோளில் சுமந்து குதிரை வண்டியில் வைத்து ஊர்வலத்தில் கொண்டு சென்றார்கள்.

ஆனால் சுதந்திர குடியுரிமைச் சட்டம் ஒற்றை ஆட்சியிலேயே இருக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தனர். கடைசியில் சோல்பரி ஏற்படுத்திய அமைப்பில் ஒரு நாடு, ஒற்றை ஆட்சி என்ற முறையிலேயே அமைக்கப்பட்டு 29(2) என்ற அதன் சரத்து சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் என்று சமாதானப்படுத்தப்பட்டது. அந்த சரத்தின் கீழ் சிறுபான்மையினரை பாதிக்கும் வகையில் இலங்கை நாடாளுமன்றம் சட்டங்கள் இயற்றக் கூடாது என்பது ஏற்பாடு. ஆனால் சிங்கள மக்களின் ஒருநாடு, ஒரு அதிகாரம் தாங்கள் பௌத்தத்தின் பாதுகாப்பாளர்கள் என்ற மனோபாவத்திற்கு 29(2) முட்டுக்கட்டையாக இருக்க, அதனை சுழியோடும் உத்திகளையும், அது கரையேறாத – சரிவராத – நிலையில் நீக்கிவிடும் வழியையும் பார்த்தனர்.

அதை ஒரேயடியாக நீக்கி விடும் வழியாக 1972 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ புதிய அரசியல் சட்டம் ஏற்படுத்தினார். அது ஒரு நாடாகவும் ஒற்றையாட்சியாகவும் நாடாளுமன்ற அதிகாரத்துடன் ஏற்படுத்தப்பட்டது. தமிழரசுக் கட்சி சுயாட்சிக்காக வைத்த எல்லாத் தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டன. 29(2)இன் பாதுகாப்பு பற்றி தமிழ் மக்கள் கோடீஸ்வரனுடைய வழக்கை பற்றி சிறிது அறிந்திருப்பார்கள். ஆனால் சிங்கள மனோபாவத்தைப் பார்க்க, ஒற்றை ஆட்சியை நிலைநிறுத்த, அவர்கள் ஏற்படுத்தும் பாரிய வழிகளை அறிந்துகொள்ள வேறு சில முக்கிய வழக்குகளையும் பார்க்க வேண்டும்.

சோல்பரியின் 29(1)C பத்தியின் படி நாட்டில் உள்ள ஓர் இனத்துக்கோ அல்லது மதத்துக்கோ மற்ற இனத்துக்கும் மதத்துக்கும் கொடுக்கப்படாத சலுகை கொடுக்கப்படக்கூடாது என்றும், அப்படியான ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறியது.

சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்ட பின் இது 1956 இல் அரச உத்தியோகத்தராக இருப்பவர்கள் சிங்களத்தில் குறிப்பிட்ட சித்தியை நியமிக்கப்பட்ட கால எல்லையுள் பெறாவிட்டால் அவர்களது சம்பள உயர்வு நிறுத்தப்படும் என்ற நிதி அமைச்சின் சுற்றுநிருபம் வெளிக்கொணரப்பட்டது. கோடீஸ்வரன் அது தனக்கு பாதகமாக இயற்றப்பட்டுள்ளது, தான் தமிழ்ப் பகுதிகளில் சேவை செய்தாலும் அல்லது சிங்கள பகுதிகளில் இருந்தாலும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும், ஆனால் தமிழ் பகுதிகளிலே சிங்கள உத்தியோகத்தர் சேவைசெய்தால் தமிழ் படித்திருக்கவேண்டுமென்றா, சிங்களப் பகுதிகளில் தொழிலில் இருந்தால் அங்குதன்னும் தங்கள் மாதிரி சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்றோ கட்டாயப்படுத்தவில்லை, ஆகவே அது ஓர் இனத்திற்கு மற்ற இனத்திற்கு மேல் தரப்படாத சலுகை, எனவே அது செல்லுபடியாகாது என வாதிக்கப்பட்டது. அதன் மூலம் தனிச் சிங்கள சட்டம் என்பதால் அது சோல்பரிக் குடியமைப்பு விதிகளை மீறுகிறது என்றும் ஆதாரங்கள் வைக்கப்பட்டன.

இந்தச் சுற்றுநிருபத்தின் மூலமான சிங்களம் மட்டும் சட்டம் சட்ட வரம்புக்கு உட்பட்டதா என்ற வாதத்துக்கு பதிலாக



சேர்.பொன். இராமநாதன்

அரசு தரப்பு சட்டத்தரணி முதலாவதாக ஓர் அரச ஊழியர் அரசாங்கத்துக்கு எதிராக சம்பள உயர்வு கோரி வழக்குத் தாக்கல் செய்யலாமா என ஆராயப்படவேண்டும், அப்படி முடியாதெனின் வழக்கு அத்தோடு முடிந்து விடும் என சமர்ப்பணம் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி O.L.D.Kerestar அந்த வாதத்தை நிராகரித்து கோடீஸ்வரனுக்கு சார்பாக தனிச்சிங்கள சட்டம் சோல்பரி சட்டத்திற்கு மாறானது எனவும், சுற்றுநிருபம் சட்டத்துக்கு புறம்பானது எனவும் தீர்ப்பளித்தார் இதனை எதிர்த்து அரசு தரப்பு மேன்முறையீடு செய்தது. அதனை நீதியரசர்கள் யு.என்.ஜி.பெர்ணான்டோ, ஜி.பி.ஏ.சில்வா, வால்டர் ஜயமன்ன ஆகியோர் விசாரித்து அரசுக்குச் சாதகமாக தீர்ப்பளித்தனர். அவர்களது தீர்ப்பில் உத்தியோகம், சம்பளம் பற்றிய உறவு இலங்கையில் ஆங்கில நீதி (English Law) அடிப்படையிலேயே பார்க்கப்பட வேண்டும், அப்படிப் பார்க்கும் போது கோடீஸ்வரன் அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது, அவரது வாதம் றோமன் டச்சு சட்டம்தான் அதை பராமரிக்கிறது என்பது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல எனத் தீர்ப்புத் தந்தார்கள். அந்த வாதங்களில் தனிச்சிங்கள சட்டம் வாதத்துக்கு வரவில்லை.

**496. அதனை எதிர்த்து பிரித்தானியாவில் சோல்பரி அமைப்பு படி மேன்முறையீடு செய்யப்பட்டதா?**

அந்த மேன்முறையீட்டு மன்றம் அந்த உறவை பராமரிப்பது றோமன் டச்சு சட்டமே, ஆகவே கோடீஸ்வரன் வழக்கு தொடரலாம் எனத் தீர்ப்பு தந்தது. அவர்களது தீர்ப்பு 11 டிசெம்பர் 1969இல் தரப்பட்டது. 1970 ஆண்டு தேர்தலின் சில மாதங்களுக்கு முன்னதாக.

அவர்களின் தீர்ப்பில் சுப்ரீம் கோர்ட்டில் (உயர் நீதிமன்றில்) சிங்களம் மட்டும் சட்டத்தின் ஆக்கம் பற்றி விவாதங்கள் எழுப்பப்பட்டமையால் தாங்கள் அதனைப் பற்றி தீர்ப்பு தரமுடியாதென்றும், அது பழைய படி இலங்கை நீதிமன்றில் பார்க்கப்பட வேண்டும் என தெரிவித்தது. ஆகவே O.L.D.Kerestar சிங்களம் மட்டும் சட்டம், சட்டத்திற்கு மாறானது என்ற தீர்ப்பு மேல் நீதிமன்றத்தில் ஆராயப்படாமலே இருந்தது. நிலைமையை உணர்ந்த அரசு அதனை உசுப்பி ஆராய்வுக்கு உட்படுத்தாமல் வாதி தரப்போடான இணக்கத்தில் சம்பள உயர்வு பற்றிய சுற்றுநிருபத்தை நீக்கி, தமிழ் அரசு உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வைத் தரச் சம்மதித்தது.

ஆகவே தமிழ்த் தலைவர்கள் புதிய குடியமைப்பு சட்டம் ஆக்கப்படும் வரை, அது செய்யப்படும் வரை, சிங்களம் மட்டும் சட்டம் 29(1)C சரத்திற்கு முரணானது என மேற்கொண்டு வாதிக்கவில்லை. அவர்கள் 72 ஆம் ஆண்டு சட்டங்கள் இயற்றப்படும்போது சமஷ்டி கேட்டார்கள். ஆனால் 29 ஆம் பத்தி மூலம் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பும் புதிய அரசமைப்பில் நீக்கப்பட்டது.

**497. அப்படியானால் அது இணக்க அரசியலா? அல்லது அந்த நேரத்துக்கு தூரநோக்கற்ற அரசியலா?**

அவை தேர்தலைக் குறி வைத்து அரசியல். கோடீஸ்வரனது வழக்கில் எவ்வளவோ தங்கியிருந்தது எனப் பரபரப்பாக விவாதிக்கப்பட்டது. பல தமிழ் உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வுகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவர்களது வருமானத்தை இது பாதித்தது. இந்த வழக்குக்கு ஆதரவாக அப்பொழுது தமிழ் எழுது வினைஞர் சங்கம் இருந்தது. அவர்கள் தமிழரசுக் கட்சியின் அனுசரணையில் இயங்கினார்கள்.

பிரதான சட்டத்தரணியாக இரங்கநாதன் கியூ.ஸி. ஆஜராகியிருந்தார். நான் அறிந்தவரையில் சிங்களம் மட்டும் சட்டத்தை சோல்பரி அரசமைப்பில் 29(2) சரத்தின் கீழ் இலங்கை மேல்நீதிமன்றில் திரும்ப O.L.D.Kerestar தீர்ப்பை ஆய்வுக்குட்படுத்துவது பற்றி அவர் அறிவுரை தந்திருந்தார். ஆனால் தீர்ப்பு வந்த நேரம் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலம். தேர்தல் அரசியலுக்கான வழிகளே பார்க்கப்பட்டன. அதனை ஆய்வுக்குட்படுத்தி அதில் வரும் தீர்ப்பை திரும்பவும் மேன்முறையீடு மன்றங்களுக்குக் கொண்டு செல்வதெனில் அதற்கான விரயம், நேரம் அது வரை சம்பளப்பாக்கி முடக்கப்படுவது என்பனவற்றின் அடிப்படையில், 'திறைசேரி சுற்றறிக்கையை வாபஸ் பெற்று சம்பளப் பாக்கியைத் தருவது' என்ற அரசின் பொறிக்குள் தமிழரசுக் கட்சியும் எழுது வினைஞர் சங்கமும் உள்வாங்கப்பட்டிருக்கலாம். சம்பளப் பாக்கிகள் கிடைப்பதால் அதை பெறுபவர்கள், மனத் திருப்தியோடு தேர்தலில் வாக்களிப்பார்கள் என்ற எண்ணங்களும் இருந்தன. ஒரு பொதுகாரியம் கழுத்தறுக்கப்படுவதற்கு அப்புக்காத்துக்களும் அரசியல் வியூகங்கள் வகுத்திருக்கலாம். நேரடியாக அந்த வழக்கிலோ அல்லது பின் ஏற்படுத்தப்பட்ட சமரசத்திலோ ஈடுபடாததால் நடந்தவைகளை பற்றிய உரையாடல்களிலிருந்து (திரு.இரங்கநாதன் உட்பட பலரிடமிருந்து) பெற்றதின் அபிப்பிராயங்களே இவை. ஆகவே அந்த முடிவுகள் அந்தக் காலத்தில் இருந்த தேர்தலை நோக்கியே பயணித்தன. சிங்கள அரசு தனது நகர்வுகளை சாதுரியமாக முன்னெடுத்திருந்தது.

(வளரும் ......)




CAT'S OUT OF THE BAG 20.8.55

# முதியோரைக் காத்து நலன்பேணும் ஆச்சிரமம் கீரிமலையில் உதயம்!


“மூவா இளமையும் காட்டி முதுமை அழகுங் காட்டி காலந்தோறும் சிறந்துநிற்கும் ஒப்பற்ற மதமாம் இந்துமதம்” இந்த இந்துமதத்தின் அடிநாதமாக ஈழத்தில் வடபகுதி யாழ்ப்பாணக் குடாநாடு சைவப் பாரம்பரியத்துடன் வரலாற்றுப் பிரசித்திபெற்று விளங்கிற்று. ஆறுமுக நாவலரால் ஈழத்தைச் ‘சிவபூமி’ என்று அழைக்கப்பட்ட பெருமையும் இந்த மண்ணுக்குண்டு.

நான்குபுறமும் கடலால் சூழப்பட்டு, அந்தக் கடற்கரையில் ஓங்கியெழுகின்ற பேரலைகள் அதன் கரையை முத்தமிட்டு வெண்ணிறநுரை பரப்புகின்ற அழகிய சிறப்புமிகு பெருமை கீரிமலைக்குண்டு. நகுலகிரி முனிவரின் கீரிமுகம் நீங்கப் பெற்றமையால் ‘கீரிமலை’ என இந்தப் பிரதேசம் பெயர்பெற்றதாக இதிகாச வரலாறுகள் சான்று பகர்கின்றன. வடக்கில் பிதிர்க்கடன் செலுத்தும் புனித தீர்த்தக் கரை இங்கு அமைந்துள்ளது. கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் பகுதிகளை இணைத்து ‘கோவிற்கடவை’ என்றொரு பெயரும் முன்னொரு காலத்தில் இருந்ததாகவும் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன.

கீரிமலை பிரதேசத்துக்குள் கால் பதித்தாலே சிவ உணர்வு எம் சிந்தையில் பதியும். இந்தக் கிராமத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களாக நகுலேச்சரம், கடற்கரைச் சித்தி விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், குழந்தைவேற்சமாதிச் சிவால யம், சுப்பிரமணியர் ஆலயம், காசி விசுவ நாதர் கோயில் என்ற ஆலயங்களும் கிழக்கு எல்லை யில் மாவிட்டபுரம் என்ற பிரசித்திமிக்க ஆலயமும் உள்ளன. வடக்கில் பாக்குநீரினைக் கடல் உள்ளது.



தெல்லியூர் சி.ஹரிகரன்



இங்கு பிதிர்க்கடன் செலுத்த வருவோரும், தம் குறைகளைய சிவனை நாடி வரும் அடியார்களுக்கு அவர்கள் வயிறாறி, இழைப்பாறிச் செல்ல நகுலேஸ்வரர் ஆலயச் சூழலில் கடற்கரைக்கு அருகில் சிறாப்பர் மடம், வைத்தியலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம் (தற்போது முதியோர் இல்லமாக மாற்றம் பெறறது), பிள்ளையார்கோயில் மடம், நாராயணபூடர் புண்ணிய தரும மடம், துறவிகளாச்சிரமம் என ஆறு மடங்கள் சிறப்புற அமைந்துள்ளன. துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட யுத்தப் பாதிப்புக்களால் இந்த மடங்கள் முழுமையுமாக அழிவுற்றன. எமது வரலாற்றுச் சின்னங்கள் அழிந்தன. ஈழத்து பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரர் ஆலயமும் பாரிய அழிவை எதிர்கொண்டது. யுத்தம் நிறைவடைந்தபின் பிதிர்க்கடன் செலுத்துவதற்காக கீரிமலைக்குச் செல்வோர் இளைப்பாற ஓர் இடமின்றிப் பெரிதும் தவித்தார்கள். சிரமப்பட்டார்கள். சிவனிடம் நொந்து, மெய்யுருகித் தமது குறைகளை ஒப்புவித்தார்கள். இலங்கையின் ஆட்சி மதம் அங்கு கோலோச்ச முற்பட்டது. பாரம்பரிய சைவ வரலாறு திரிவுபடுத்தப்படுமோ என்ற அச்சம் இந்துக்கள் மனதில் ஆழ வேரோடியது.

இந்த நிலையில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் காலடியில் பிறந்து வெறும் 32 வருடங்கள் வாழ்ந்த ஆதிசங்கராச்சாரியார் பூரி, காஞ்சி, சிறுங்கேரி, துவாரகை ஆகிய இடங்களில் நான்கு மடங்களை நிறுவி, 6 மதங்கள் நிறுவி, 10 உபநிடதங்களுக்கு உரை எழுதி, சிவன்மீது சிவானந்த லகரி, சக்திமீது சௌந்தர்ய லகரி, விஷ்ணுமீது பஜ கோவிந்தம், முருகன் மீது ஸ்ரீ சுப்ரமன்ய புஜங்கம், விநாயகர் மீது கணேச பஞ்சாட்சரம் பாடி சாதாரண மனிதர்களால் சாதிக்கமுடியாத சாதனைகளையும் போதனைகளையும் ஆற்றி சைவத்தைக் காத்தமை போன்று, ஆதிசங்கரர் போன்று ஈழத்தில் அவதரித்து, கீரிமலையின் இந்த அவல நிலையைக் கண்ணுற்ற கலாநிதி ஆறு.திருமுருகன் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் எதிர்நீச்சலிட்டு, தனது நண்பர் ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் நீலகண்டனின் துணையுடன் 2012 ஆம் ஆண்டு கீரிமலையில் ஓய்வுநிலை ஆசிரியர் அமரர் விஸ்வநாதன் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட காணியில் சைவமணம் பரப்பும் சிவபூமி மடத்தை 4 மாத கட்டுமானப் பணிகளுடன் பிரமாண்டமாக நிறுவினார். பிறமதப் பிரசன்னத்தைத் தகர்த்தார். அதன்பின் யாத்திரிகர் விடுதியை உருவாக்கினார். இன்று அந்தப் பிரதேசத்தை சைவ மணங்கமழும் புன்னிய சைவபூமியாக உருவாக்கினார்.

அந்த சிவபூமி மடத்தின் ஊடாக ஞாயிறு பௌர்ணமி குருபூசை நாள்களில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள், சமய நிறுவனங்கள் யாத்திரையாக வரும் போது தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. சிவலிங்கப்பெருமான் நடராசப்பெருமான்மடத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு தினமும் உணவு படைத்து வழிபாடு நடைபெற்றுவருகின்றது.

அந்தியேட்டி கிரியை செய்யவரும் தூர இடத்து அன்பர்கள்ஆறுதல் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


தற்போது, அங்கு அழிவடைந்த கிருஷ்ணபிள்ளைமடம் இருந்த இடத்தை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அமரர் கிருஷ்ணபிள்ளையின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட 19 பரப்புக் காணியில் ஆதரவற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியவர்களுக்காக முதியோர் ஆச்சிரமம் அமைக்கப்பட்டு இன்று (வியாழக்கிழமை) திறந்துவைக்கப்பட உள்ளது. எத்தனையோ எழுத்தாளர்கள், கல்விமான்கள் கூட வாழும் போது பெருமையுடனும் புகழுடனும் வாழ்ந்தவர்கள் முதுமையில் அவர்களின் அருமை புரியாத பிள்ளைகளால் கைவிடப்பட்டு, அநாதரவாக ஆதரவற்றுத் தவிக்கின்ற நிலைமையில் அவர்களின் ஆதரவுக்கு கரம் கொடுப்பதற்காக அவதியுறும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெரியவர்களுக்காக இந்த முதியோர் இல்லம் கீரிமலையில் அமைந்துள்ளது.

இந்த முதியோர் ஆச்சிரமம் நவீன வசதிகளுடன் கூடிய 15 அறைகளைக் கொண்டு அமைந்துள்ளது. முதியவர்களுக்கு இறுதிக் காலத்தில் தமது அறிவுப் பசியைப் போக்கவேண்டும், தம் மனக்குறைகளை இறைவனிடத்தே ஒப்புவித்து, இறைசிந்தையோடு வாழவேண்டும் என்ற அவா தொக்குநிற்கும். அவர்களின் அந்த உள்ளக்கிடக்கைகளை உணர்ந்த அவர்களின் புதல்வன் கலாநிதி ஆறு.திருமுருகன் முதியோர் இல்லத்தில் நூலகம், ஆலயம் என்பவற்றையும் உருவாக்கியுள்ளார். இதேபோன்று சுழிபுரத்திலும் சிவபூமி முதியோர் இல்லம் 78 முதியவர்களுடன் சிறப்பாக சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நான் ஆரம்பத்தில் ஆதிசங்கரரை உவமயித்தமை போன்று குறுகிய வட்டத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் நின்றுவிடாமல் அவரால் கீரிமலை சிவபூமி மடம், கீரிமலை யாத்திரிகர் விடுதி, சிவபூமி முதியோர் இல்லம், கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலை, கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலை, நாவற்குழி அரும்பொருட் காட்சியகம், குப்பிளான் ஞான ஆச்சிரமம், மயிலிட்டி ஞான ஆச்சிரமம், இயக்கச்சி நாய்களின் சரணாலயம், நாவற்குழி திருவாசக அரண்மனை, திருகோணமலை மனவிருத்திப் பாடசாலை, சிவபூமி திருமூலர் மூலிகைத் தோட்டம், சிவபூமி கலைக் களஞ்சியம், சிவபூமி கல்வி நிதியம், சிவபூமி வாழ்வாதார நிதியம், சிவபூமி மருத்துவ நிதியம், ஆனைக்கோட்டை அபயம் வைத்தியசாலை, சுன்னாகம் துர்க்கா மருத்துவமனை, சிவபூமி தொழிற்பயிற்சிநிறுவனம்என்பனநிர்வகிக்கப்படுகின்றன. தற்போது மாவிட்டபுரத்தில் திருக்குறள் அரண்மனை அமைப்பதற்காகக் கடந்த மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் சிற்பக் கலைஞர்களால் நடைபெறுகின்றன.

கீரிமலையை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவந்து புனிதப் பிரதேசமாக்கவேண்டும் என்பதில் குழுவினர் தீவிர ஈடுபாடு காட்டினர். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வந்தால், அரசமரங்கள் முளைப்பதும் அதில் புத்தபெருமான் குந்துவதும் தடுக்கமுடியாது. சைவர்களின் வரலாற்று ஆதாரங்களும் கல்வெட்டுக்களும் தொண்மையும் காலப்போக்கில் மறையும் அபாய நிலைமை. இந்த இடத்தில் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ. சுகிர்தனும் 2011-2015 வரை மக்கள் பிரதிநிதிகளாக இருந்த பிரதேசசபை உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியமையால் அந்த துர்செயற்பாடு தடுக்கப்பட்டது.

ஆனாலும், “காய்த்த மரம் அது மிகை கல்லடிபடும்” என்பது சித்தர் வாக்கு. வரலாறு திரிவுபடக்கூடாது அங்கு சைவமும் தமிழும் வாழவேண்டும் என்பதற் காக கலாநிதி ஆறு.திருமுருகன் தன்னையே அர்ப்பணித்து செயற்படுகின்றார் என்பது வெள்ளிடை மலை.



# காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம்

## கிழக்கு மாகாணத்திற்கான 5 வது விசேட வழிகாட்டல் குழு மாநாடு

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் தொடர்பாக ஆராயும் கிழக்கு மாகாணத்திற்கான 5 வது விசேட வழிகாட்டல் குழு மாநாடு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ.வணசிங்க தலைமையில் நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கமத்தொழில் அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் ராஜ கருணா பங்கேற்ற குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உள்ளிட்ட கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்கள் உள்ளிட்ட துறைசார் அமைச்சுக்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கமத்தொழில் அமைச்சின் ஊடாக உலக வங்கியின் கடன் உதவியுடன் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் தொடர்பாக ஆராயும் குறித்த கலந்துரையாடலின் போது நீர்ப்பாசன குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் புனரமைப்பது தொடர்பாகவும், அதன் ஊடாக விவசாயிகளுக்கு பாரியளவில் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்பட்டது.

இலங்கையின் ஆறு மாகாணங்களிலும் 11 மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இத்திட்டமானது கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய 3 மாவட்டங்களிலும் இத்திட்டமானது தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், திருகோணமலை மாவட்டத்தில் யானோயா, மட்டக்களப்பு மாவட்டத்தில் முந்தனையாறு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் கேடோயா, கரந்தி ஓயா போன்ற ஆற்றுப்படுக்கைகளை மையப்படுத்திய குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன் அவற்றில் சில குளங்கள் தற்போது புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இத் திட்டத்தை எவ்வாறு சீராகவும் விரைவாகவும் அமுல்படுத்துவது மற்றும் இவற்றினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை எவ்வாறு சீர் செய்வது என்பது தொடர்பாகவும் குறித்த மாநாட்டின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.



# தற்காலிகமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்

## என்கிறார் கம்மன்பில

அச்சத்தின் காரணமாக மக்கள் அதிகளவில் எரிபொருளை பெற்றுக்கொள்வதால் தற்காலிகமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

மேலும் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் அது ஓரிரு தினங்களே நீடிக்கும் எனவும் விலைக்கும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கும் தொடர்பில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை பயன்பாட்டைப் பொறுத்தே தவிர விநியோகம் மற்றும் தேவையைப் பொறுத்தது அல்ல என்றும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

நிரப்பும் நிலையங்களுக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு என கொண்டுவரப்படும் தேவையான எரிபொருள் ஒரு நாளில் முடிவடைகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



# கனடா உயர்ஸ்தானிகருடன் சுரேன் ராகவன் எம்.பி. சந்திப்பு

இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் உள்ள கனடா தூதுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

இலங்கை கனடா நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் இம் மாத முற்பகுதியில் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கனேடிய உயர்ஸ்தானிகருடன் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

கனடா உயர்ஸ்தானிகருடனான இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளுவதற்கு சாத்தியமான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், இலங்கையில் கல்வி, விவசாயம் மற்றும் தொழில் நுட்பத்துறை ஆகியவற்றின் அபிவிருத்திக்கு கனடாவிடமிருந்து உதவிகள் பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்படும் சாத்தியமான வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. சர்வதேசத் தரம் வாய்ந்த கனடாவின் தொழிற் கல்வியை இலங்கை இளையோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதன் மூலம் இலங்கையில் தொழில் தகைமையுள்ள இளையோரை உருவாக்குவதுடன் கனடா மற்றும் மேற்குலகின் தொழில் சந்தைகளில் இலங்கையின் இளையோர் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு வழி வகைகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பில் கனடாவின் உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கனடா உயர்தூதரக அரசியல் உத்தியோகத்தர் திருமதி இந்திராணி ஜயவர்த்தனவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விலைச்சூத்திரத்துக்கு மீண்டும் செல்லவேண்டும்

## அலி சப்றி ஆலோசனை

*மீண்டும் எரிபொருள் விலை சூத்திரத்தை அறிமுகப் படுத்த வேண்டும் என தான் அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கிறேன் என நீதியமைச்சர் அலி சப்றி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.*

*உலக சந்தையில் ஏற்படும் விலை மாற்றங்களுக்கு அமைய எரிபொருள் விலையில் ஏற்றம், இறக்கம் செய்யும் வகையிலான முறைமைக்குச் செல்ல வேண்டும்.*

*இலங்கை மத்திய வங்கி, அது தொடர்பாக கூறியுள்ளதால், அது சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனவும் நீதியமைச்சர் கூறியுள்ளார்.*

*வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது முறை வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அலி சப்றி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.*

# பௌத்த அறநெறி பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை

நாடளாவிய ரீதியில் சகல பௌத்த அறநெறி பாடசாலைகளையும் மீள ஆரம்பிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் பௌத்த அறநெறி பாடசாலைகளை மீள ஆரம்பிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பௌத்த விவகார ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் 21ஆம் திகதி தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 28 ஆம் திகதி முதல் பௌத்த அறநெறி பாடசாலைகளைத் திறக்க முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு திறக்கப்படும் பாடசாலைகளில் சுகாதார விதிமுறைகளைக் கடுமையாக அமுல்படுத்துமாறும் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

# வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த குழு நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மாவட்ட மேலதிக அரச அதிபர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாடசாலை அதிபர் அடங்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களால் அதிகளவானோர் உயிரிழந்திருக்கிறார்கள். குறிப்பாக கடந்த திங்கட்கிழமை கூட கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்னால் பாடசாலை மாணவியொருவர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற விபத்துக்களைத் தடுப்பது தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதத்திலும் விசேட கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட தொழிற் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சட்டவைத்திய அதிகாரி, கல்விப் பணிப்பாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கியிருந்தனர்.

எதிர்காலத்தில் விபத்துக்களைத் தடுக்கும் விதத்தில் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த கடந்த காலங்களில் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொவிட் காரணமாக மேற்படி செயற்பாடுகள் நடைபெறாத காரணத்தால் இந்த விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

எதிர்வரும் காலங்களில் இந்த விபத்துகளைத் தடுப்பதற்கு ஏற்ற விதத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி, உதவி பொலிஸ் அத்தியட்சகர், அதிபர்கள் என பலர் அடங்கிய விதத்திலே குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் இது தொடர்பாக இந்த விழிப்புணர்வை முன்னெடுப்பதற்கு ஆலோசனைகளை பெற்று எதிர்காலத்தில் இந்த விபத்துக்களை தடுப்பதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுக்கும் விதத்திலே குறித்த கலந்துரையாடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# ஊவா மாகாணத்தினது பல பகுதிகள் பனிமூட்டம்

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஊவா மாகாணத்தின் பல பகுதிகள் காலை மற்றும் மாலை நேரங்களில் பனிமூட்டமாகக் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், பதுளை, பசறை, மடுல்சிம, எகிரிய, எல்ல, வெலிமடை மற்றும் ஹப்புத்தளை ஆகிய வீதிகளில் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த வீதிகளால் சூழப்பட்ட மலைகள் மண்சரிவுகளுக்கு உள்ளாகின்றன என்றும் பாறைகள் மற்றும் மண்மேடுகளால் அடிக்கடி தடைப்படுகின்றன எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

# ஜோதி வடிவில் இறைவனை காணும் கார்த்திகைத் தீபத் திருவிழா இன்று

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)



'ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே' என்று இறைவனை மனமெண்ணி துதிப்பதும், பிரார்த்தனை செய்வதும், பாடுவதும், ஆடுவதும், நடைமுறையில் இருந்து வருகிறது. இறைவனைக் கண்டோமா? என்றால் அதற்குச் சரியான பதிலை எம்மால் சொல்லிவிட முடியாமலே இருக்கிறோம். ஆனாலும் இறைவன் இருக்கிறான் என்பதைப் பலரும் நம்பியே இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இறைவனைக் கல்லிலும், செம்பிலும், மண்ணிலும், மரத்திலும், பொன்னிலும், நிலத்திலும், நீரிலும், காற்றிலும், தீயிலும், ஒளியிலும், ஒலியிலும், மழையிலும், இடியிலும் என்று பலநிலையில் காண முற்படுகின்றோம். இந்த வகையில் ஒளிவடிவில் இறைவனை மனமிருத்தும் தத்துவார்த்தமான விழாவாக விளங்குவதுதான் கார்த்திகை மாதத்தில் வருகின்ற திருவிளக்குத் திருவிழா எனலாம்.

தீபத்திருவிழா என்றதும் தீபாவளி பண்டிகைதான் எங்கள் மனதில் வந்து முதலில் நிற்பதாகும். உண்மையில் கார்த்திகையில் வருகின்ற விழாவினைத்தான் தீபாவளி என்று கொள்ளுதல் வேண்டும் என்னும் ஒரு கருத்தும் இன்று பரவலாகி வருகிறது. தீப + ஆவளி என்றால் தீபங்களை வட்டமாக – வரிசையாக வைப்பதாகும். கார்த்திகை விழாவிலும் தீபங்கள் வரிசையாயும் வட்டமாகவும் வீட்டு வாசல்களில் வைக்கப்படுகின்றன. கோவில்களிலும் வைக்கப்படுகின்றன. எனவே கார்த்திகையில் வருகின்ற "திருவிளக்கு விழா"வினை தீப ஒளித் திருநாள் என்றால்,அது பொருந்தாதா ?

தீபாவளி எனும்பொழுது ஆணவம் அடங்கிய நிலை அடையாளப்படுத்தப்படுகிறது. கார்த்திகை தீபத்திருவிளக்கு விழாவும் ஆணவம் அடங்கிய நிலையினையே காட்டி நிற்கிறது. தீபாவளியில் திருமால் இணைக்கப்படுகிறார். கார்த்திகை தீபத்திருவிளக்கு விழாவில் சிவன் இணைக்கப்படுகிறார். சிவன் என்பதோ திருமால் என்பதோ முக்கியமல்ல. இறை என்பதுதான் இங்கு முக்கியமாகும். அதாவது ஆணவம் அடங்கினால் இறையின் தரிசனம் கிடைக்கும் என்பதுதான் இதன் உண்மையான தத்துவமாக பொதிந்து கிடக்கிறது.

அடிமுடி தேடிய வரலாறு, ஆறுமுகப் பெருமான் தோன்றிய வரலாறு என்று பல வரலாறுகள் கார்த்திகை திருவிளக்குத் திருவிழாவுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இங்கெல்லாம் முக்கியத்துவம் பெற்று நிற்பது ஒளியேயாகும் . அடி முடி வரலாற்றில் இறைவன் ஜோதிப் பிழம்பாக வந்தார் என்பதிலும், ஆறுமுகன் வரலாற்றில் இறைவனின் நெற்றிக்கண்ணில் தோன்றிய ஒளிப் பொறியே ஆறுமுகனாக கொள்ளப்பட்டார் என்பதிலும் கருதும் நிலையில் ஒளிதான் முக்கியம் பெற்று நிற்கிறது.



ஆதிகாலத்து மனிதன் வாழ்க்கையில் ஒளி மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. இருளைக் கண்டால் பயந்த மனிதன் ஒளியைக் கண்டபொழுது உவகை உற்றான். ஒளி எப்படி வருகிறது என்பதை அவனால் அறிய முடியவில்லை. இதனால் ஒளி என்பது உயர்வானது என்னும் கருத்து அவனின் உள்ளத்தினுள் இறுக்கமாய் அமர்ந்து கொண்டே விட்டது எனலாம். மனித வரலாற்றில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் பின்னர் அறம் என்றும் நீதி என்றும் கடவுள் என்றும் சமயம் என்றும் ஏற்பட்ட பின்னரும் கூட ஒளியின் இருக்கை என்பதும் முக்கியத்துவத்தை இழக்காமலே தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. அதன் நிலையினையே கார்த்திகை திருவிளக்குத் திருவிழாவாக மாறியிருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இந்து சமயத்தில் விளக்கு என்பது மிகவும் முக்கியத்துவம் பெற்று நிற்கிறது. எந்தவொரு நிகழ்ச்சியானாலும் விளக்கு இல்லாமல் அந்த நிகழ்ச்சி இடம் பெறவே மாட்டாது. மங்கலம் என்னும் அரிய கருத்து விளக்குடன் இணைக்கப்பட்டே விட்டது. விளக்கினை சகல செல்வங்களும் தரும் இலக்குமியாகவே ஆக்கியும் விட்டார்கள். இறை வழிபாட்டில் ஒளியின் இடம் மிகவும் இன்றியமையாததாகும். ஒளியின் அடையாளங்களாக பல விளக்குகள் கோவில்கள் தோறும் இருக்கின்றன. இறைவனுக்கு நடைபெறும் பூசையின் பொழுது காட்டப்படும் பலவித தீபங்கள் அனைத்துமே ஒளியின் வெளிப்பாடே எனலாம்.

கார்த்திகைத் திருவிளக்குத் திருவிழா என்றால் எல்லோர் எண்ணங்களிலும் திருவெண்ணாமலைதான் முன்வந்து நிற்கும். அங்குதான் இவ்விழா மிகவும் பக்திபூர்வமாக நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்ல பஞ்சபூத தலங்களில் அக்கினிக்குரிய தலமாகக் கொள்ளப்படுவதும் திருவெண்ணாமலைத் தலமேயாகும். அக்கினிக்கான தலத்திலே கார்த்திகைத் திருவிளக்கு விழாவினைச் செய்வதுதான் மிகவும் பொருத்தம் என்னும் ஐதீகம் தொடர்ந்து கொண்டே வருவதால் திருவெண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழா இந்துக்களின் முக்கிய சமயவிழாவாக அமைந்து விட்டது.

திருவெண்ணாமலையின் உச்சியில் மிகப்பெரிய தீபம் ஏற்றப்படுகிறது. மூன்று தொடக்கம் நான்கு நாள்கள் வரை எரியும் இத்தீபம் அறுபது மீற்றர் வரை ஒளியினைக் காட்டி நிற்கும். அண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகைத் தீபம் என்பது திருவிளக்கின் விஸ்வரூபம் ஆகும் எனலாம். இத்தீபங்கள் ஏற்றப்படுவதால் பலனுண்டா என்னும் வினாவும் இல்லாமல் இல்லை. இந்து சமயத்தில் நம்பிக்கைகள் பல இருக்கின்றன. ஆனால் மூட நம்பிக்கைகளை விதைக்க முற்படுவதால்தான் கடவுளையோ சமயத்தினையோ கேள்விக்கு ஆளாக்கும் நிலை ஏற்படுகிறது. எக்காரியத்துக்கும் அர்த்தம் இல்லாமல் இந்துசமயம் இருக்கவில்லை என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும். அர்த்தத்தை மக்கள் மனதில் அமர்த்திட அங்கு இறை நம்பிக்கையை இணைத்திருக்கிறது என்பதை விளங்கிக் கொண்டால் எந்தச் சிக்கலுக்கும் இடமிருக்காது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

பெருந்தீபங்கள் ஏற்றுவதால் புயல் தோன்றுவது தடுக்கப்படும் என்றும் அப்படிப் புயல் தோன்றுமாயின் அதன் வேகம் தணிக்கப்படும் என்றும் நம்பப்படுகிறது. திருவிளக்குகள் ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையில் உள்ள இணைப்பை உணர்த்தி நிற்கின்றன. விளக்கில் எரிகின்ற சுடரானது நமக்கு நன்றாகத் தெரியும் புறத்தோற்றமாகும். ஆனால் அந்தச் சுடரானது எண்ணெயை மெல்ல மெல்ல கிரகித்தே எரிகிறது என்பது நாமுணரவேண்டிய அகத்தோற்றமாகும். வாழ்க்கையில் தெளிவான புறத்தோற்றத்தையும் அதற்கு அடிப்படையான நுட்பமான புறத்தோற்றத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டி நிற்பதே தீப வளிபாட்டின் உட்கருத்தாகும்.

மிருகத்துடன் காட்டில் வாழ்ந்த மனிதன் நாளடைவில் காட்டைவிட்டு நாட்டுக்கு வருகிறான். நாட்டினை உருவாக்கி தனது வாழ்வினை வளமாக்குகின்றான். அவ்வழியில் சமயம் முகிழ்க்கிறது. கடவுள் நம்பிக்கை எழுகிறது. மனிதனே தனக்கான வழிபாட்டு முறைகளை உருவாக்குகிறான். இங்குதான் நம்பிக்கை என்பது தலைமை வகிக்கிறது. அந்த நம்பிக்கைதான் கடவுளையே தோற்றுவிக்கிறது. நம்பிக்கையின் அடிப்படையில் பல கதைகள் உருவாகின்றன. அக்கதைகள் நம்பக்கூடியனவா, நம்ப முடியாதனவா என்பது விவாதம் அல்ல. அக்கதைகள் மனிதனை நல்வழிப்படுத்த உதவியாய் அமைந்தன என்பதை மறுத்துவிட முடியாது.

இந்த வகையில் உருவான பல புராணங்களை விமர்சனம் செய்வதோ அல்லது கிண்டல் கேலி செய்வதோ பொருத்தம் உடையதாகத் தெரியவில்லை. தத்துவங்களை அப்படியே சொன்னால் ஏற்றுக் கொள்ளுவது என்பது மிகவும் கடினமாகும். அதனால் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் உண்மைகளும் தத்துவங்களும் நல்ல வடிவில் கதை என்னும் வடிவமாக்கப்படும் தேவை அவசியமானது. அந்தவகையில் கார்த்திகை திருவிளக்கு விழா பற்றி புராணக்கதைகள் பல இருக்கின்றன. அவற்றை நம்புவதா ? அப்படியெல்லாம் நடக்குமா? என்றெல்லாம் எண்ணும் பாங்கினை விட்டுவிட்டு மனித வாழ்வினை வையத்துள் வாழ்வாங்கு வாழ உதவும் நல்ல கருத்துக்களை சமயத்தின் ஊடாகவும் இறையென்னும் மெய்பொருளின் ஊடாகவும் காண்பதும் கருத்திருத்துவதுமே பண்புடை செயலாகும். அந்தவகையில் கார்த்திகைத் திருவிளக்கு விழாவினை மனமிருத்துவோம்! ஒளிமயமாக இறைவனைக் காண்போம். ஒளிமயமான எதிர்காலத்தை எதிர்பார்த்து இருப்போம். ஜோதிப் பிழம்பாக இறையினைக் காணுவோம்!



# இன்ஜின் இல்லாத வாகனத்துக்கு டயர் வாங்குவது போன்ற பாதீடு!

## இம்ரான் காட்டம்



இன்ஜின் இல்லாத வாகனத்துக்கு டயர் வாங்குவது போன்று பாதீட்டைத் தயாரித்துள்ளார்கள், ஓட்டோ சாரதிக்கு 62 ரூபா நிவாரணமே இந்த பாதீட்டின் மூலம் வழங்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

வரவு–செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

இலங்கை மக்களின் குரல் வளைகள் நசுக்கப்பட்டு அவர்கள் சுவாசிக்கவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், இந்த பாதீட்டின் மூலம் சுவாசிக்கச் செயற்கை சுவாசமாவது வழங்குவார்கள் என மக்கள் எதிர்பார்த்திருந்த வேளை உங்களுக்குச் செயற்கை சுவாசம் கூட நாங்கள் வழங்க மாட்டோம் என பஸில் ராஜபக்ஷ மக்களுக்குக் கூறி உள்ளார். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு வரும் முன் அவருக்கு ஏழு அறிவு உள்ளது. அவர் மக்களுக்கு நிவாரணம் வழங்குவார், எரிபொருள் விலை குறைப்பார் என்று பல கதைகள் சொன்னார்கள். எனக்கு தெரிந்து விஞ்ஞான ரீதியில் மனிதர்கள் யாருக்கும் ஏழு அறிவு இல்லை.

ஆனால் ஏழு அறிவு உள்ளவர் எனச் சொன்னவர்களுக்குக் கணித ரீதியில் ஒன்றைக் கூறிக்கொள்ள முடியும். நீங்கள் கூறுவதை வைத்துப் பார்க்கும் போது உங்களை விட பஸில் ராஜபக்ஷவுக்கு ஓர் அறிவு அதிகம். ஆறு அறிவுள்ள பஸிலை விட ஓர் அறிவு குறைந்த உங்களை நாங்கள் எவ்வாறு அழைப்பது.

இந்த பாதீட்டை எடுத்து நோக்கினால் கிழவி ஒருவரை அலங்கரித்து மணப்பெண்ணாக்கும் கதைதான் நடைபெற்றுள்ளது. விவசாயிகளின் பசளை பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளதா? இல்லை. அரிசி மாபியாவை ஒழித்து அரிசியின் விலையை அரசால் தீர்மானிக்கத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளதா? இல்லை. காஸ் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளதா? இல்லை.

பால் மா தட்டுப்பாட்டுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளதா? இல்லை. அடுத்த ஆண்டில் ஏற்படப்போகும் டொலர் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளதா? இல்லை. அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு உள்ளதா ?இல்லை. சமுர்த்தி பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா? இல்லை. மலையக மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா? இல்லை, ஆனால் என்ன செய்துள்ளார்கள்.

இன்ஜின் இல்லாத வாகனத்துக்கு டயர் வாங்குவது போன்று பாதீட்டைத் தயாரித்துள்ளார்கள். ஓட்டோ ஓட்டுநர்களுக்கு நிவாரணம் வழங்க 60 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சுமார் 10 லட்சம் ஓட்டோ உள்ளன என புள்ளிவிவரம் கூறுகிறது.

அதில் சுயபாவனை, பழுதடைந்தது என 2 லட்சத்தைக் கழித்துப் பார்த்தால் சுமார் 8 லட்சம் ஓட்டோ சாரதிகள் இருப்பர். அப்படி பார்க்கப்போனால் ஒரு சாரதிக்கு வருடத்துக்கு 750 ரூபாவே நிவாரணமாக வழங்கப்படவுள்ளது. மாதமொன்றுக்கு 62 ரூபா.

இதுபோல தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க 1150 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சுமார் 19 ஆயிரம் தனியார் பஸ்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது.

ஆகவே ஒரு தனியார் பஸ் உரிமையாளருக்கு மாதம் ஒன்றுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரணம் சுமார் ஆறாயிரத்து ஐந்நூறு ரூபா. அதுபோல பாடசாலை பஸ், வான் ஓட்டுநர்களுக்கு 40 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 40 ஆயிரம் பாடசாலை பஸ், வான் ஓட்டுநர்கள் உள்ளனர் எனப் புள்ளி விவரம் கூறுகிறது. அப்படிப் பார்த்தால் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 833 ரூபா இதுதான் நிதி அமைச்சர் வழங்கியுள்ள நிவாரணம் அவர்கள் ஒரு நாளைக்கான எரிபொருள் தேவைக்கும் இந்த பணம் போதாது.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு பற்றி நிதி அமைச்சர் தெரிவித்த கருத்து முழு அரச ஊழியர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. கொவிட் அனர்த்தத்தின்போது உயிரைப் பணயம் வைத்து மக்களைக் காப் பாற்றியது சுகாதாரத்துறை சார் அரச ஊழியர்களே. நாட்டில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு சூறாவளி என ஒவ்வோர் அனர்த்தத்தின் போதும் மக்களைக் காப்பாற்றியது இந்த அரச ஊழியர்கள்தான்.

ஆனால், நீங்கள் தகுதியில்லாதவர்களுக்கு வழங்கிய அரசியல் நியமனங்களே அதிக செலவினத்துக்குக் காரணம். அதற்குச் சிறந்த உதாரணமே நீங்கள் தற்போது வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு லட்சம் வேலைவாய்ப்புக்கள். சமுர்த்தி பெறத் தகுதியானோர்க்கு வேலை தருகிறோம் எனப் பிரதேச செயலகங்கள் தோறும் நேர்முகத் தேர்வு நடத்தி அந்த மக்களைப் பல நாள்கள் அங்கும் இங்கும் அலைய விட்டபின் நேர்முகத்தேர்விலேயே கலந்துகொள்ளாதவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால்தான் சுமை ஏற்படுகிறது. ஆகவே, தியாகங்கள் செய்து அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அரச ஊழியர்களைச் சாதாரண தரம் சித்தியடையாத அமைச்சர்கள் விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசின் செலவினங்களைக் குறைக்க அமைச்சர்களினதும் அரச அதிகாரிகளினதும் செலவைக் குறைக்கிறோம் எனக் கூறி மாதம் ஒன்றுக்கு ஐந்து லீற்றர் பெற்றோல் கொடுப்பனவைக் குறைக்கிறோம் என நிதி அமைச்சர் கூறுகிறார். யாரை ஏமாற்ற இந்த சிறுபிள்ளைத்தனமான குறைப்பு. அமைச்சர்களின் எரிபொருள் கொடுப்பனவைக் குறைத்தால் மாதம் ஒன்றுக்கு 350 லீற்றர் பெற்றோல் கொடுப்பனவே குறைக்க முடியும். இது வெறும் ஐம்பது ஐயாயிரம் மட்டுமே. ஆனால், உங்கள் அமைச்சர்களின் மாதம் ஒன்றுக்கான தேநீர் செலவு லட்சங்களைத் தாண் டுகிறது.

ஏழு மூளை உள்ளவர்களின் செலவு குறைப்பு இப்படித்தான் இருக்கும் என நினைக்கிறேன். அத்துடன் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் என்ற ரீதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அபிவிருத்திகளில் பின்தங்கியிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு விசேட திட்டங்கள் எதையும் நான் காணவில்லை.

நல்லாட்சி அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண மக்களின் மீள் குடியேற்றத்துக்கென நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அரசுக்கு ஆதரவு அளிக்கும் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீங்கள் எப்படியும் இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு கையை உயர்த்துவார்கள் எனத் தெரியும். கையை உயர்த்த கடைசி இதையாவது கேட்டுப்பெற்ற பின்னர் கையை உயர்த்தலாமே எனத் தெரிவித்துள்ளார்.

## யாழ்.மாநகர ஆணையருக்கு கொரோனாத் தொற்று உறுதி



யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனுக்கு கொரோனா நோய்த்தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அவர் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளார் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

மாநகர சபை ஆணையாளருக்கு கொரோனா நோய் அறிகுறிகள் காணப்பட்டதால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவருடன் பணியாற்றும் 15 உத்தியோகத்தர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் குறிப்பிட்டனர்.

## தனியார் துறை ஊழியர்களினது ஓய்வூதிய வயது 60 ஆக உயர்வு

### சட்டமூலத்தில் சபாநாயகர் கைச்சாத்து

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கான வயது வரம்பில் திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கைச்சாத்திட்டார்.

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று (புதன்கிழமை) சட்டமூலத்தில் கையெழுத்திட்டார்.

நவம்பர் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தில் இலங்கையின் தனியார் துறை ஊழியர்களின் புதிய குறைந்தபட்ச ஓய்வு வயது 60 ஆக அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தற்போது 55 வயது நிரம்பியவர்கள், 57 வயது வரை பணிபுரியலாம் என்றும் 53 முதல் 54 வயது வரை உள்ளவர்கள் 58 வயது வரையும், 52 வயது நிரம்பியவர்கள் 59 வயது வரையும் பணிபுரியலாம் என்றும் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 52 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் புதிதாகப் பணிக்கமர்த்தப்பட்டவர்கள் புதிய ஓய்வுபெறும் வயதான 60 வயது வரை பணியாற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 50 வயதுடைய பெண்களும் 55 வயதுடைய ஆண்களும் தங்கள் விருப்பப்படி ஓய்வு பெறலாம் என்றும் புதிய சட்டமூலத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா தரணிக்குளத்தில் குடிநீர்த் திட்டம் ஆரம்பிப்பு



கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட எல்.ஜி. கிராமத்தைக்கட்டியெழுப்பும் பிரமுகர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தரணிக்குளம் கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடத்தில் உருவாக்கப்பட்ட குடிதண்ணீர்த்திட்டம் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

உலகப்புகழ்பெற்ற இலத்திரனியல் உற்பத்தி நிறுவனமான இலங்கையின் முன்னணி வணிகக்குழுமமான அபான்ஸ் மற்றும் Community Chfst of Korfa. அமைப்பு Korfa Frifns of Hopf Intfrnational Srilanka நிறுவனம் (KFHI) ஆகிய நிறுவனங்களின் கூட்டிணை வில் உருவாக்கப்பட்ட LG கிராமத்தை கட்டி யெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூலம் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் கிராமங்களில் உள்ள தேவைகளை இனங்கண்டு அத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட வாய்ப்புக்களின் மூலம் இந்த வருடம் நான்கு திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களில் முதலாவது திட்டத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை வவுனியா தரணிக்குளத்தில் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் வசிக்கும் 610 குடும்பங்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் திட்டத்தை வழங்கும் ‘உயிர் வாழ்வதற்கு ஒரு துளி நீர்’ என்ற வடிகட்டுதல் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் வடிகட்டுதல் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

## இரு ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு வவுனியாவில் கொவிட் தொற்றுறுதி

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவுக்குக் கற்பிக்கும் இரு ஆசிரியர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் ஏற்கனவே ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் இருவர் தொற்றுக்குள்ளான நிலையில் அப்பாடசாலையைச் சேர்ந்த மேலும் சில ஆசிரியர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதில், ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் இருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்கு உள்ளானவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காண்பதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வவுனியாவில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை குறித்த பாடசாலையில் 4 ஆசிரியர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாரதீய ஜனதாக் கட்சியைச் சமாளிக்க இலங்கை இந்துத்வா இராஜதந்திரத்தை கையிலெடுக்கிறது

## நாடாளுமன்றில் கோட்டா அரசை போட்டுத் தாக்கினார் சித்தர்

கொழும்பு,நவ.17

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியைத் (பி.ஜே.பியைத்) திருப்திப்படுத்துவதற்காக இந்துத்வா இராஜதந்திரத்தை கையிலெடுக்கிறது இலங்கை அரசாங்கம். அதற்காகவே பல்வேறு நாடகங்கள் அரங்கேறி வருகின்றன எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

இன்று இந்த - பௌத்த நல்லுறவு பற்றி பேசுகின்றீர்கள். பாரத பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் மிகவும் பலமான நிலையிலுள்ள பாரதீய ஜனதாக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்கு - இந்துத்வா கருத்தியலுக்கு நெருக்கமானவர்களாக உங்களைக் காண்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றீர்கள்.

இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட கண்டியிலுள்ள சீதை அம்மன் ஆலயத்திலுள்ள கல்லை ராமர் கோவில் கட்டுவதற்கு கொண்டு போகின்றார். இறைச்சிக்காக மாடு அறுப்பதை தடுப்பது பற்றிய சட்டமூலத்தைக்கொண்டு வருகின்றீர்கள். அமைச்சர்நாமல்ராஜபக்ஷசிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பகவத்கீதையின் பிரதியை பிரதமர் மோடிக்கு பரிசளிக்கின்றார்.

இதன்மூலம் நீங்கள் கூறவருவது தெளிவாகவே புரிகின்றது. பி.ஜே.பியை திருப்திப்படுத்துவதற்காக இந்துத்வா இராஜதந்திரத்தை கையிலெடுத்திருக்கின்றீர்கள். இந்து - பௌத்த ஒற்றுமை பற்றிபேசுகின்றீர்கள். ஆனால் மறுபுறும் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் இந்து தமிழ் மக்களின் சமத்துவம், கௌரவத்தை உறுதிப்படுத்துவதை எதிர்க்கின்றீர்கள்.

பாரம்பரிய இந்து ஆலயங்களை பௌத்த விகாரைகளாக பிரகடனப்படுத்துகிறீர்கள். அந்த இடங்களை பௌத்த பிக்குகள் ஆக்கிரமிப்பதற்கு உங்கள் படைகள் உதவுகின்றன. இன்று பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கியிருக்கின்றீர்கள். ஆனால் இந்து மதத்தினதோ அல்லது இலங்கையில் உள்ள ஏனைய மதங்களினதோ வளர்ச்சிக்கு நிதியொதுக்கவில்லை.

இங்கும் உங்களுடைய உள்நோக்கம் வேறு என்பதை நாமறிவோம். இந்துத்வா கருத்தியலுக்கு நெருக்கமானவர்களாக உங்களைகாண்பித்துக்கொண்டு இந்தியாவின் ஆதரவுடன் 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமல் ஆக்கலாம் என்று எண்ணுகின்றீர்கள்.

13 ஆவது திருத்தத்தை தூக்கிவிட்டு தமிழ் மக்களுக்கு இலங்கையின் அதிகாரத்தில் எந்தவொரு பங்கினையும் வழங்க முடியாதென்று கூற முற்படுகின்றீர்கள்.

அதாவது இந்தியாவின் இந்து மக்களை பயன்படுத்தியே வட கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் இந்துக்களை அதிகாரமற்றவர்களாக்கலாம் என்று கணக்குப் போடுகின்றீர்கள்.

இவ்வளவு அனுபவங்களுக்கு பின்னரும்கூட தமிழ் மக்களை எவ்வாறு மேலும்ஒன்றுமில்லாதவர்களாக்கலாம் என்றே சிந்திக்கின்றீர்கள்.

காலம் சென்ற பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க 1973 இல் கூறிய ஒரு விடயத்தை இப்போது நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கு மென்று நினைக்கின்றேன். 'நாடு எரிமலையின் மீது அமர்ந்திருக்கின்றது அது எந்த நேரத்திலும் வெடித்து சிதறலாம்' என்றார்

அன்று சிறிமாவோ அம்மையார் கூறியது இப்போதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கின்றது. அந்தளவிற்கு நாடு அதலபாதாளத்தை நோக்கி சரிந்து கொண்டிருக்கின்றது. உண்மையில் இந்த நாடு எந்த நிலையிலிருக்கின்றது?

பஞ்சத்தில் மக்கள் சாக நேரிடுமோ என்று அஞ்சுமளவிற்கு பொருள் தட்டுப்பாடு,ஏழை மக்களால் சமாளிக்கவே முடியாதளவிற்கு விலைவாசி உயர்வு, அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்டிருக்கும் மோசமான வீழ்ச்சி, மோசமான நிதி நெருக்கடியென நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் இது போன்றதொரு நெருக்கடி இதற்கு முன்னர் ஒரு போதுமே ஏற்பட்டதில்லை.

இதற்கு காரணம் என்னவென கேட்டால் கொரோனா வைரஸ் தொற்றை காரணம் காட்டுவார்கள். ஆனால் இன்றைய பெரும் நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் தொற்று மட்டுமே காரணமா என்ற நேர்மையான கேள்வியை நாம் கேட்கின்றோம்.

கொரோனாத் தொற்று உலகளாவிய நெருக்கடி என்பது ஒரு காரணம் மட்டுமே, பல நாடுகள் இந்த நெருக்கடி நிலையை வெற்றிகரமாக கையாண்டு வருகின்றன. அரசாங்கத்தின் திறமையும் அதில் சார்ந்தே உள்ளது.

இந்தப் பொருளாதார நெருக்கடி திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல, இது வெகுகால புற்றுநோய். இப்போது மறைக்க முடியாத அளவிற்கு நோய் முற்றிவிட்டது.

இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகளை தீர்க்கவோ, நியாயமான கோரிக்கையை கருத்தில் கொள்ளவோ இல்லை. மாறாக தமிழர் மீதான கட்டவிழ்த்த அடக்குமுறையைக் கையாண்டீர்கள். இதற்கு ஆட்சியை முன்னெடுத்த இரண்டு கட்சிகளும் பொறுப்பாகும்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் புறக்கணிப்பட்ட காரணத்தினால்தான் இந்த நாடு ஓர் உள்நாட்டு யுத்தத்திற்குள் சிக்கியது. நாட்டின் ஒட்டுமொத்த வளமும் யுத்தவெற்றியில் முதலீடு செய்யப்பட்டது. யுத்த வெற்றிக்காக பல நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையேற்பட்டது.

இதனால்தான் நாடு பெரும் கடன் சுமைக்குள் சிக்கியது. அத்துடன் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பின்னடைவைக் கண்டது. நீங்கள் விரும்பிய யுத்த வெற்றிக்காக முழு நாட்டையும் அடகுவைக்க நீங்கள் தயங்கவில்லை. இதன் காரணமாகத்தான் இந்த நாடு இன்று வல்லரசுகளின் அதிகார போட்டிக்குள் சிக்கியிருக்கின்றது.

நீங்கள் விரும்பிய யுத்த வெற்றி உங்களுக்கு கிடைத்துவிட்டது. ஆனால் உங்களால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியவில்லை. பொருளாதார ரீதியில் கையேந்தாத இலங்கைச்சமூகமொன்றைஉருவாக்குவதில் உங்களால் வெற்றிபெற முடிந்ததா?



இந்த நாடு எதிர்கொண்டிருக்கும் வரலாற்று நெருக்கடிக்கான உண்மையான காரணத்தை இந்த பின்னணியில்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் எத்தனையோ வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கவில்லை.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் ஆரம்பத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் இந்த நாடு யுத்தத்தை நோக்கி சென்றிருக்காது. நாட்டின் வளமும் சிதைந்திருக்காது. நாடு கையேந்தும் நிலைக்கும் சென்றிருக்காது. இவ்வாறானதொரு வரலாற்று நெருக்கடிக்கு நாட்டு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது.

தமிழ் மக்களை எப்போதுமே இரண்டாம் தர பிரஜைகளாக வைத்திருக்க வேண்டுமென்னும் உங்கள் தீராத ஆசையினால் நீங்கள் சாதித்தது என்ன? சிங்கள இளைஞர், யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி செல்வதற்காக வரிசையில் நிற்கின்றனர்.

ஒரு காலத்தில் இராணுவ கெடுபிடிகளாலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் அச்சுறுத்தலாலும் எமது இளைஞர் யுவதிகள்நாட்டைவிட்டுவெளியேறினர். அவ்வாறானவர்கள்தான் இன்று புலம் பெயர் சமூகமாக வளர்ச்சியுற்றிருக்கின்றனர். இன்று பொருளாதார நெருக்கடியை தாங்கிக் கொள்ள முடியாமல் சிங்கள - இளைஞர் யுவதிகள் நாட்டை விட்டு வெளி யேறும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது - என்றார்.

# வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் விடுத்த அறிக்கை தவறாகப் புரியப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிப்பு

நவம்பர் மாதம் 20ஆம் திகதியை இறந்தவர்களுக்காக மன்றாடும் சிறப்பு நாளாக வட கிழக்கு ஆயர் மன்றம் விடுத்த அறிக்கை தொடர்பான விளக்கம் ஒன்றை பொது நிலையினர் தரப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ.அ.அமலறட்ணம் என்பவர் அனுப்பி வைத்துள்ளார். அதில் கூறப்பட்டவை வருமாறு:-

நவம்பர் மாதம் 20ஆம் திகதியை இறந்தவர்களுக்காக மன்றாடும் சிறப்பு நாளாக வட கிழக்கு ஆயர் மன்றம் விடுத்த அறிக்கை தொடர்பாக பல வாதங்களும் பிரதிவாதங்களும் விமர்சனங்களும் அறிக்கைகளும் கண்டனங்களும் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அறிக்கையை முழுமையாகப் படிக்காமலும் தெளிவாகப் புரியாமலும் இவை நடக்கின்றன என்றே நம்புகிறோம்.

அறிக்கையில் மாவீரர் தினத்தை மாற்றும்படி யார் கோரியது? எங்கு கோரப்பட்டுள்ளது? - எங்கும் கோரப்படவில்லை. மாவீரர் நாள் வேறு தினம். இது வேறு தினம். மேலும் இங்கு தமிழர் தினம் என்றோ, தமிழ் தேசியம் என்றோ, போராளிகள் என்றோ எதுவும் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இங்கு இறந்த அனைவர் தினம் என்னும் போது இலங்கை மண்ணில் போரினால் இறந்த அனைத்து இன மத மக்களையும் எந்த பேதமின்றிக் குறிக்கிறது.

நவம்பர் மாதம் இறந்தோரை நினைவு கூரும் மாதமாக காலாதி காலமாக உலகக் கத்தோலிக்க திருச்சபையில் நினைவு கூரப்பட்டு வருகிறது. இந்த நவம்பர் மாதத்தில் 2ஆம் திகதி இறந்த ஆத்துமாக்கள் தினம் முதல் பல இறந்த தினங்கள் நினைவு கூரப்படுகின்றன. இறந்த ஆயர்கள் தினம் -இறந்த குருக்கள் தினம் எனப் பல தினங்கள் உண்டு. கத்தோலிக்க மக்கள் இம் மாதத்தில் பணம் செலுத்தி பூசை ஒப்புக் கொடுத்து, அன்னதானம் செய்து, தமது குடும்பத்தில் இறந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்கு ஒரு தினம் ஒதுக்கி செபிக்கின்றனர்.

நவம்பர் மாதத்தில் 20ஆம் திகதியை போரினால் இறந்த அனைவருக்காகவும் மன்றாடும் தினமாக கத்தோலிக்க மக்களுக்கு மட்டும் வேண்டுதல் விடப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. மற்றவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. 21ஆம் திகதி தான் மாவீரர் வாரம் ஆரம்பிக்கிறது. இந்த அழைப்பு தொடரவிருக்கும் மாவீரர் வாரத்தை தொடக்கி வைத்து அத்தினத்திற்கு மேலும் வலுவூட்டுகிறது என்பது ஏன் உணரப்படவில்லை?

அறிக்கையை முழுமையாகப் படியுங்கள். அறிக்கையில் உள்ள பின்வரும் இரண்டு பந்திகளுக்கும் சிறப்பு முக்கியத்துவம் கொடுத்துப் படியுங்கள்.

"இந்நிலையில் இலங்கைத் தேசத்தில் நடைபெற்ற கொடிய போரினால் இறந்து போனவர்களையும், அதன் விளைவாகபாதிக்கப்பட்ட அனைவரையும்நினைவுகூர்ந்து இறைவேண்டல் புரிய வடக்கு - கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் நவம்பர் மாதத்தில் வருகின்ற மூன்றாம் சனிக்கிழமையைத் தீர்மானித்துள்ளோம்.

இதற்கெனக் குறிப்பிட்ட இடமும் இல்லை, நேரமும் இல்லை. அன்றைய தினம் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகளில் மக்கள் ஈடுபடவும் இல்லங்களில் தீபம் ஏற்றி இறைவேண்டல் புரியவும் அன்போடு நாம் அழைப்பு விடுக்கின்றோம்."

இறுதியில் பின்வருமாறு உள்ளது:-

"இவ்வழைப்பை வடக்கு-கிழக்கு கத்தோலிக்க ஆயர்களாக நாம் எம் மக்களுக்கு விடுத்தாலும் சமயங்களைக் கடந்து அனைத்து சமயத் தலைவர்களையும் தமிழ்கூறும் நல்லுலகையும் அன்போடு அழைத்து நிற்கின்றோம். எமது இந்த முன்னெடுப்பு வெற்றியளிக்க அனைவரது ஆதரவையும் வேண்டி முடிக்கின்றோம்" - என்று அவ்வறிக்கை நிறைவடைகிறது.

- இவ்வாறு அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டது.

# வல்வெட்டித்துறை நகரசபையில் வரவு - செலவுத் திட்டம் தோல்வி!

வல்வெட்டித்துறை நகர சபை யின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று ஒரு வாக்கினால் தோற்கடிக்கப் பட்டது.

சுமார் இரண்டு மாதங் களுக்கு முன்பு அதிகாரத்தை கைப்பற்றிய சுயேச்சைக் குழுவின் தலைவர் செல்வேந்திரா நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற சபைக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். இதனை வாக்கெடுப்புக்கு விட்டபோது அதிகாரத்திலுள்ள சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவாக எட்டு வாக்குகளும் எதிர்க்கட்சி அணிகளுக்கு ஒன்பது வாக்குகளும் கிடைத்தன.

இதனால் சுயேச்சை குழு தோல்வியடைந்தது. சபையின் முன்னாள் தலைவர் கோ.கருணானந்தராசா கொரோனாத் தொற்றால் மரணம் அடைந்தமையை அடுத்து இடம்பெற்ற தலைவர் தெரிவுக்கான தேர்வில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் சதீஸைத் தோற்கடித்து சுயேச்சைக் குழுவின் தலைவர் செல்வேந்திரா தலை வரானார். இத்தேர்தலில் தமிழரசுக் கட்சி உறுப்பினரும் சபையின் உப தலைவருமான கேசவன், சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவாக நின்றமையால் முன்னர் சுயேச்சைக் குழு அதிகாரத்தைக் கைப்பற்றியது.

சுயேச்சைக் குழுவுக்கு முன்னர் ஆதரவளித்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் கேசவன், நேற்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது எதிர்த்து வாக்களித்தமையால் சுயேச்சை குழு தோல்வியடைந்துள்ளது.

எனினும் அடுத்த இரண்டு வாரத்துக்குள் மீண்டும் ஒரு தடவை மாற்றத்துடன் தமது வரவு - செலவுத் திட்டத்தை தலைவர் செல்வேந்திரா சமர்ப்பிக்க முடியும். அதிலும் அது தோற்கடிக்கப்படுமானால் அவர் தமது பதவியை இழப்பார். மீண்டும் புதிய தலைவர் தேர்வு இடம்பெறும்.

---

## மாவீரர் நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விதிக்கக் கோரி 12 பேரின் பெயர்களைக் குறிப் பிட்டு பொலிஸார் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுவை விசாரித்த நீதிபதி அந்த 12 பேருக்கும் மாவீரர் வார ஏற்பாடுகளை முன் னெடுக்கத் தடை உத்தரவு பிறப் பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் மாகாண சபை உறுப் பினர்களான எம்.கே.சிவாஜி லிங்கம், து.ரவிகரன், பீற்றர் இளஞ் செழியன், த.யோகேஸ் வரன் உட்பட்டவர்களுக்கே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

## காசல்ரீ நீர்த்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 மணியளவில் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

சடலமாக மீட்கப்பட்ட நபர் நோர்வூட் மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதுடைய சரத்குமார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இளைஞரின் சடலம் சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக கிளங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிவ்வெளிகம – காசல்ரீ நீர்த்தேக்கத்தின் அருகாமையில் ஆண் ஒருவரின் ஒரு ஜோடி பாதணியும் ஸ்மாட் போன் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொருள்கள் நேற்றுக் காலை 08.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை நிவ்வெளிகம பிரதேசத்தைச் சேர்ந்த, இரண்டு சிறுமிகள் முகம் கழுவதற்காக காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அருகில் வந்துள்ளனர்.

இதன்போது, குறித்த பொருள்களைக் கண்ட சிறுமிகள், கொழும்பிலுள்ள தனது தந்தைக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து குறித்த தந்தை, தொலைபேசி ஊடாக நோர்வூட் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் தேடும் பணியை முன்னெடுத்தபோதே குறித்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

---

## மனோவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. அவர் தற்போது தனிமைப்படுத் தப்பட்டுள்ளார்.

தனக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என கடந்த 11 ஆம் திகதி தனது சமூகவலைத்தளங்களில் மனோ கணேசன் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், கொரோனாத் தொற்றியுள்ளமையை அவர் நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

---

## மீண்டுமொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று சபையில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேறு நாடுகளில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. எனினும், இங்கு என்ன நடக்கின்றது? வைரசுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்கவே எதிரணி முற்படுகின்றது. இது வெட்கத்துக்குரிய விடயமாகும்.

பொலிஸார் அரசியல்வாதிகளின் கட்டளைகளின் பிரகாரம் செயற்படவில்லை. சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் பிரகாரமே செயற்படுகின்றனர். இவ்வாறான போராட்டங்கள்மூலம் மீண்டும் கொரோனா பரவும் என சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தால், அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை எவருக்கும் கிடையாது.

எனவே, நாட்டில் மற்றுமொரு அலை ஏற்பட்டு நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கான முழு பொறுப்பையும் எதிரணி ஏற்கவேண்டும். பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

---

## நேற்று 728...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை 5 இலட்சத்து 53 ஆயிரத்து 772 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 448 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 188 ஆக அதிகரித்துள்ளது.

---

## தொற்று அதிகரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை நேற்று 552,994 ஆகவும், மொத்த உயிரிழப்புகள் 14,034 ஆகவும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொவிட் செயலூக்கியாக (பூஸ்டர்) பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அனுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது.

# யாப்பில் இருப்பதை நிறைவேற்றுங்கள்; 13 இல் பறித்தவற்றை மீள வழங்குங்கள்!

## நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் வலியுறுத்தல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.17

அரசியல் யாப்பில் இருப்பவற்றை நிறைவேற்றுங்கள். 13 இலிருந்து பறிக்கப்பட்ட விடயங்களை மீளவும் தமிழ் மக்களுக்கு வழங்குங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியும் புளொட் தலைவருமான த.சித்தார்த்தன் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் யாப்பிலுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நேற்று வரையில் நீங்கள் முழுமையாக அமுல்படுத்தவில்லை. அரசியல் யாப்பை மீறுவதில் நீயா? - நானா? என்று போட்டிபோடுகின்றீர்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த மறுப்பதானது அரசியல் யாப்பை அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகும். இதனை உணர முடியாதளவிற்கு எதேச்சதிகாரம் உங்களின் கண்களை மறைத்திருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியும் இப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ‘13 பிளஸ்’ தொடர்பில் பேசினார். இந்தியாவிற்கும் சர்வதேசத்திற்கும் அவ்வாறான வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், 13இற்கு அப்பால் சென்று தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என மஹிந்த வாக்குறுதியளித்திருந்தார்.

அந்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது? இப்போது மீண்டும் உள்ளகப் பொறிமுறை தொடர்பில் பேசுகின்றீர்கள். புலம்பெயர் சமூகத்துடன் பேசவுள்ளர் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அமுல்படுத்த மறுத்துவரும், உங்களின் உள்ளக பொறிமுறையை சித்தசுவாதீன முள்ள எவராவது நம்புவரா?

இந்த அரசாங்கத்தால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமென்பதில் எந்தவொரு நம்பிக்கையும் என்னிடமில்லை. ஏனெனில், நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு காரியத்தையும் நீங்கள் செயலில் காண்பிக்கவில்லை.

உண்மையில், நீங்கள் கூறும் புதிய அரசியல் யாப்பானது - ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்ட - தமிழ் மக்களின் சமத்துவம் கௌரவத்தை உறுதிப்படுத்தும் அரசியல் ஏற்பாடுகளை கொண்டிருக்கின்ற - முக்கியமாக, அவற்றை நாடாளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக மீளவும் பறித்தெடுக்க முடியாத ஏற் பாடுகளை கொண்டிருக்குமானால் - அப்படியானதோர் அரசியல் யாப்பை நாம் இருகரம்கூப்பி வரவேற்போம்.

ஆனால், நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களை உற்றுநோக்கினால், அரசாங்கத்திடம் அப்படியான எந்தவொரு நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாகாண சபைகள் செயலற்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகள், மருத்துவமனைகளை திட்டமிட்டு மத்திய அரசின் கீழ் கொண்டு செல்கின்றீர்கள்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூட இப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச்செய்யும் ஓர் இரகசிய படையணியாக தொழிற்படுகின்றதோ என்னும் சந்தேகம் எழுந்திருக்கின்றது எனத் தெரிவித்தார்.

# நாட்டில் மேலும் 23 பேரை பலியெடுத்த கொரோனா

இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பலியாகியுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப் படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 57 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 23 மரணங்களில் 10 பெண்களும், 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மாதகலில் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டு நடவடிக்கை முறியடிப்பு

(கலையமுதன், ந.லோகதயாளன்,எஸ்.நிதர்ஷன்)

யாழ்.மாதகல் பகுதியில் கடற்படையினரின் தேவைக் குத் தனியார் காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட இருந்த காணி அளவீட்டு நடவடிக்கை மக்களின் எதிர்ப்பால்கைவிடப்பட்டுள்ளது.

மாதகல் ஜே / 150 கிராம சேவையாளர் பிரிவில் தனியார் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினர், அக் காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீட்டு வேலைகளை நேற்று புதன்கிழமை முன்னெடுக்க முயன்றனர்.

காணிகளை அளவீடு செய்வதற்காக நிலஅளவைத் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் வருகை தந்த போது காணி உரிமையாளர்கள், அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் கடும் எதிர்ப்பினைதெரிவித்ததைஅடுத்து,காணிஅளவீட்டுப்பணிக்குவந்தவர்கள்திரும்பிசென்றனர்.